**கால்நடை பராமரிப்பு, பால்வளம்**
**மற்றும் மீன்வளத் துறை**

# பால்வளம்

கொள்கை விளக்கக் குறிப்பு
**2018–2019**

மானியக் கோரிக்கை எண்.8


**கே.டி. ராஜேந்திரபாலாஜி**
பால் மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை அமைச்சர்



©
தமிழ்நாடு அரசு
2018

"வேளாண்மைப் பிரிவின் ஓர் அங்கமாகவும், கிராமப்புற பொருளாதாரத்தை நிர்ணயிக்கும் ஒரு கருவியாகவும், பெண்களுக்கு சுயவேலை வாய்ப்பினை அளிக்கும் தொழிலாகவும் விளங்கிக் கொண்டிருக்கின்ற கால்நடை வளர்ப்புத் தொழிலை ஊக்குவிக்கும் வகையில் இரண்டாம் வெண்மைப் புரட்சியை ஏற்படுத்தும் நோக்கோடு, கால்நடை பராமரிப்புத் துறைக்கும், பால்வளத் துறைக்கும் . . . . . முன் எப்போதும் இல்லாத அளவுக்கு எனது அரசால் முக்கியத்துவம் தரப்பட்டு ............. பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன".

**டாக்டர் ஜெ ஜெயலலிதா**
**மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர்**
**(23.09.2015 அன்று ஆற்றிய உரை)**

"ஒவ்வொரு தனிமனிதனின் வளர்ச்சியே ஒரு தேசத்தின் வளர்ச்சிக்கான அளவுகோலாகும். மக்களாட்சியின் வெற்றி என்பது, ஒரு தனிமனிதனது நிதி, உணவு, கல்வி, இருப்பிடம், சுகாதாரம், வேலை மற்றும் பாதுகாப்பு போன்ற அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்வதிலேயே அமைகிறது. இந் நேர்வில் தமிழகம் அளவிடமுடியாத வளர்ச்சியை எட்டியுள்ளது."

**திரு எடப்பாடி கே. பழனிசாமி,**
**மாண்புமிகு முதலமைச்சர்**

## பொருளடக்கம்


| வ. எண் | பொருள் | பக்க எண் |
|---|---|---|
| 1 | முன்னுரை | 1 |
| 2 | பால்வளத் துறை | 3 |
| 3 | பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் | 9 |
| 4 | மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் | 15 |
| 5 | தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் | 23 |
| 6 | தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தால் நடத்தப்படும் பால்பண்ணைகள் | 25 |
| 7 | தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தால் நடத்தப்படும் சேவை நிறுவனங்கள் | 36 |
| 8 | இணையம் மற்றும் மாவட்ட ஒன்றியங்களால் நடத்தப்படும் அலகுகள் | 41 |
| 9 | மாநில / மத்திய அரசு நிதியின் கீழ் மேற்கொள்ளப்படும் பால்பண்ணை வளர்ச்சி திட்டங்கள் | 47 |

| | | |
|---|---|---|
| 10 | முக்கிய உட்கட்டமைப்பு மற்றும் தொழிற்நுட்ப தர உயர்வு திட்டங்கள் | 60 |
| 11 | பால் உற்பத்தியாளர்களுக்கு அளிக்கப்படும் சிறப்பு சேவைகள் | 65 |
| 12 | பால் மற்றும் பால் பொருட்கள் விற்பனை | 72 |
| 13 | தரக்கட்டுப்பாடு நடவடிக்கைகள் | 88 |
| 14 | நிதி செயல்பாடு | 91 |
| 15 | பணியாளர் நலன் | 95 |
| 16 | பால் கூட்டுறவு தணிக்கைத் துறை | 98 |
| 17 | 2018–19 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவு கணக்கு | 103 |
| 18 | முன்னேற்ற பாதை | 104 |
| 19 | முடிவுரை | 106 |

## பால்வளத்துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு 2018–2019

### 1. முன்னுரை

தமிழ்நாட்டில் பால்வளத்துறை **1958** ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. பால் கொள்முதல், பதப்படுத்துதல் மற்றும் பால் மற்றும் பால்பொருட்களை விற்பனை செய்தல் போன்ற நடவடிக்கைகளை கையாள்வதற்காக ஜூலை **1972**ல் தமிழ்நாடு பால்வள நிறுவனம் தோற்றுவிக்கப்பட்டது.

இந்தியாவில் பால் கூட்டுறவுகளின் இயக்கத்தை முன்னின்று நடத்தி வெண்மைப் புரட்சிக்கு வித்திட்ட டாக்டர் குரியன் அவர்கள், இந்தியாவை உலக அளவில் பால் உற்பத்தி செய்யும் நாடாக உருவாக்கி, பல்லாயிரக்கணக்கான கிராமப்புற விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மாற்றியமைத்துள்ளார்.

டாக்டர் குரியன் அவர்களால் உருவாக்கப்பட்ட ஆனந்த் பாணியை அடிப்படையாகக் கொண்டு, தமிழ்நாட்டில் மூன்றடுக்கு கூட்டுறவு அமைப்புகளில், தலைமைச் சங்கமாக, தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம், பிப்ரவரி **1981**ல் அமைக்கப்பட்டது. **1982** ஆம் ஆண்டில்

மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் தோற்றுவிக்கப்பட்டன.

நம் தேசத்தின் சமூக பொருளாதார முன்னேற்றம் பெரும்பாலும் இந்திய கிராமப்புற வளர்ச்சியை கொண்டே அமையும் என்பதன் அடிப்படையிலேயே பால் கூட்டுறவு அமைப்பு வேரூன்றியுள்ளது.

தமிழ்நாடு 2017–18 ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு சராசரி 29.46 இலட்சம் லிட்டர் என்ற அளவுடன் நாட்டின் கூட்டுறவு அமைப்புகளில் 4வது ஆகவும், நாளொன்றுக்கு 201 இலட்சம் லிட்டர் என்ற அளவில் நாட்டின் முதல் பத்து மாநிலங்களில் ஒன்றாகவும் விளங்குகிறது.

தற்போது தனிமனித சராசரி பால் இருப்பு 1993–94ல் இருந்த நாளொன்றுக்கு 169 கிராம் என்ற அளவிலிருந்து நடப்பு ஆண்டில் நாளொன்றுக்கு 268 கிராம் என்ற அளவிற்கு உயர்ந்துள்ளது. தற்போது அதிகரித்து வரும் மக்கள் தொகை, தனி மனித வருமானம், வாழ்நிலையில் மாற்றம், உணவு பழக்கவழக்கம், ஏற்றுமதி வாய்ப்புகள் பால் மற்றும் பால்பொருட்கள் தேவையை அதிகமாக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் **இரண்டாம் வெண்மைப் புரட்சி**யின் பலன்களை முழுமையாக பெற பால் உற்பத்தியாளர்களை கவரும் வகையில் கொள்முதல் விலை வழங்குதல், தொடக்க பால் சங்கங்கள் முதல் மாநில இணையம் வரையிலான அனைத்து நிலைகளிலும் பால்பண்ணை உட்கட்டமைப்பு வசதிகளில் பெருமளவு முதலீடு செய்தல் போன்ற நடவடிக்கைகளை தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மேற்கொண்டுள்ளது.

## 2. பால்வளத்துறை

### 2.1. குறிக்கோள்கள்:

1. கிராமந்தோறும் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் அமைத்து அதன் மூலமாக இடைத்தரகர்களின் சுரண்டல்களிலிருந்து பால் உற்பத்தியாளர்களின் நலன் பாதுகாத்தல்.

2. பாலின் தரத்தின் அடிப்படையில், கொழுப்பு சத்து மற்றும் இதர சத்துகள் அடிப்படையில் பால் உற்பத்தியாளர்களுக்கு நிலையான மற்றும் நியாயமான விலை கிடைப்பதை உறுதி செய்தல்

3. அமைப்புசாரா பால் உற்பத்தியாளர்களை, அமைப்புசார் பால் பண்ணைத் தொழில் அமைப்பிற்கு கொண்டுவரத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

4. கறவை மாடுகளுக்குத் தேவையான உள்ளீட்டு பொருட்களான கலப்புத் தீவனம், பசுந்தீவனம் மற்றும் தேவையான கால்நடை இடுபொருட்கள் மற்றும் கால்நடைகளின் நலன் சார்ந்த சேவைகள் கிடைக்கப்பெறுவதை உறுதி செய்தல்.

5. நுகர்வோருக்கு தரமான பால் மற்றும் பால் பொருட்கள் நியாயமான விலையில் கிடைப்பதை உறுதி செய்தல்

6. பெண்களின் வருமான அளவை உயர்த்துவதன் வாயிலாக அவர்களது பொருளாதார முன்னேற்றம் மற்றும் கிராமப்புற பொருளாதாரத்தை மேம்படுத்துதல்.

## 2.2. குறிக்கோள்களை நிறைவேற்ற மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்

பால்வளத் துறையின் குறிக்கோள்களை அடைந்திட கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:

1. பால் உற்பத்தியாளர்களின் தொடக்க பால் கூட்டுறவு சங்கங்கள் சிறப்பாக செயல்பட வழிவகை செய்தலும், செயலிழந்த சங்கங்களை செயல்படும் சங்கங்களாக மாற்றவும் நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

2. பால் உற்பத்தியாளர்கள் நலனுக்காக தொடக்க சங்கங்கள் மற்றும் ஒன்றியம் அளவில் தேவையான வசதிகளை உருவாக்குதல்.

3. இலக்கு நிர்ணயிக்கப்பட்ட குழுக்களிடையே திறன் மேம்பாடு பயிற்சிகளை வழங்குதல்.

4. கிராம அளவில் தூய பால் உற்பத்தித் திட்டத்தை பலப்படுத்துவதற்கு பால் உற்பத்தியாளர்களிடையே தரப்பரிசோதனை நடவடிக்கையில் தேவையான விரிவாக்கக் கல்வி வழங்குதல்.

5. மத்திய மற்றும் மாநில அரசுகளின் பல்வேறு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுதல் மூலம் பாலுற்பத்தி, பால்பதப்படுத்துதல் மற்றும் விற்பனையில் சிறந்த நிலையினைஅடைதல்.

6. தேவைகளை எதிர்கொள்ளும் வகையில் பால் கூட்டுறவு அமைப்பின் கீழ் செயல்பட்டு வரும் பால்பண்ணைகளின் கையாளும் திறன் உயர்த்துதல்.

7. புதிய பாலகங்கள், பால் விற்பனை முனையங்கள் உருவாக்குதல் மற்றும் சில்லரை விற்பனை அலகுகளுடனான ஒருங்கிணைப்பை மேம்படுத்துதல்.

8. புதிய பால் வழித்தடங்கள் உருவாக்குதல், நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள் துவக்குதல் மற்றும் பால் அட்டை விற்பனையினை அதிகரித்தல்

**2.3. துறையின்நிர்வாக அமைப்பு:**

பால் உற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத்துறை இயக்குநர் அவர்கள், துறைத் தலைவராக செயல்பட்டு வருகிறார். இவர், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணைய நிர்வாக இயக்குநராகவும் செயல்பட்டு வருகிறார். இவர் மாநிலத்தின் மூன்றடுக்கு பால் கூட்டுறவுகளுக்கும், செயல் பதிவாளர் ஆவார். இவர் தனது அதிகாரங்களை பயன்படுத்தி, **1983**ஆம் வருடத்திய தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் மற்றும் **1988**ஆம் வருடத்திய தமிழ்நாடு

கூட்டுறவுச் சங்கங்களின் விதிகளின் கீழ் சட்டப்பூர்வ நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். தலைமையலுவலகத்தில் துணைப் பால் ஆணையர், பால்வளத்துறை இயக்குநர் அவர்களுக்கு நிர்வாக மற்றும் சட்டபூர்வ பணிகளில் துணை புரிகின்றார்.

1983ஆம் வருடத்திய தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் மற்றும் 1988ஆம் வருடத்திய தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகளின் கீழான அதிகார பகிர்வு பெற்று சட்டப்பூர்வ நடவடிக்கைகள் மற்றும் நிர்வாக பணிகளை மாவட்ட அளவில் மேற்கொள்ள மாவட்ட அளவிலான 29 துணைப்பதிவாளர் (பால்வளம்)கள் செயல்பட்டு வருகின்றனர். களப்பணி மற்றும் பல்வேறு பணி நிலைகளில் மொத்தம் 805 பணியாளர்களை கொண்டு இத்துறை செயல்பட்டு வருகிறது.

**2.4. பால் கூட்டுறவு சங்கங்கள்:**

பால் கூட்டுறவுகளின் நிர்வாக மேலாண்மை, அச்சங்கங்களின் உறுப்பினர்களால் ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழுவிடம் இருந்து வரும். 5 ஆண்டு கால நிர்வாகக் குழு பதவிக் காலம் முடிவடையும் போது 1983ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின்

சட்டம் மற்றும் விதிகள் 1988ல் தெரிவித்துள்ளபடி நிர்வாகத் தேர்தல் நடத்தப்பட்டு புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழுவிடம் நிர்வாக பொறுப்பு ஒப்படைக்கப்படும்.

கடைசியாக ஏப்ரல் 2013 ஆம் ஆண்டில் தேர்தல் நடத்தப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழு உறுப்பினர்கள் பிரதம சங்கங்கள் அளவில் 09.05.2013 அன்றும், மாவட்ட அளவில் 13.06.2013 அன்றும், மாநில இணையத்தில் 17.03.2013 அன்றும் பொறுப்பேற்றனர்.

தற்போதைய நிர்வாகக் குழுவின் ஐந்து ஆண்டு காலம் ஏப்ரல் 2018ல் நிறைவு பெறுவதைத் தொடர்ந்து தொடக்க பால் கூட்டுறவு சங்கங்களுக்கு நிர்வாகக்குழு தேர்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. முதல் நிலையில் தேர்தல் முடிவுற்ற 1663 சங்கங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக்குழு 09.04.2018ல் பொறுப்பேற்றுக் கொண்டது. எனினும், நீதிமன்ற ஆணைகளின் அடிப்படையில் தொடர் நடவடிக்கைகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. சட்ட சிக்கல்கள் தீர்வு செய்யப்பட்ட பின் தொடர் நடவடிக்கைகள் முடிக்கப்படும்.

எனினும் தடையின்றி பால் உற்பத்தியாளர்களுக்கு பால் பண பட்டுவாடா செய்திடவும், அன்றாட பணிகளை

மேற்கொள்ளவும் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களின் வங்கி சேமிப்பு கணக்கில் அச்சங்க செயலாளருடன் துறை அலுவலர் கூட்டாக கையொப்பமிட்டு வரவு செலவு மேற்கொள்ள அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## 3. பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களின்நிர்வாகம்

மாநிலத்தில் உள்ள மூன்று நிலை பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் பின்வருமாறு :

அ. கிராம அளவில் பால் உற்பத்தியாளர்கள் சங்கம்

ஆ. மாவட்ட அளவில் பால் ஒன்றியங்கள்

இ. மாநில அளவில் இணையம்

### 3.1. பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள்

தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தை உருவாக்க, அடிப்படை தேவையாக, உத்தேசிக்கப்பட்ட அச்சங்க விவகார எல்லையில் வசிக்கும் குறைந்த பட்சம் 25 தனிநபர்கள் இருக்க வேண்டும்.

கிராம அளவில் 2,044 மகளிர்கென தனி பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் உள்ளிட்ட 12,585 தொடக்க பால் கூட்டுறவு சங்கங்கள் உள்ளன. இத்தொடக்க

பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள், அதன் உறுப்பினர்களிடமிருந்து நாளொன்றுக்கு **35** இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்து உள்ளூர் தேவைக்கு நாளொன்றுக்கு **4.5** இலட்சம் லிட்டர் பால் விற்பனை செய்தது போக மீதமுள்ள பாலை மாவட்ட ஒன்றியங்களுக்கும் பெருநகர பால் பண்ணைகளுக்கும் அனுப்பி வைக்கின்றன.

விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் பாலின் தரத்திற்கேற்ப பால் உற்பத்தியாளர்களுக்கு நியாயமான பால் கொள்முதல் விலையினை, தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் வழங்குகின்றன. தற்போது பசும் பால் மற்றும் எருமைப்பாலுக்கு முறையே லிட்டர் ஒன்றிற்கு ரூ.**28/–** மற்றும் ரூ.**35/–** கொள்முதல் விலையாக வழங்கப்பட்டு வருகிறது. இச்சங்கங்கள், தான் ஈட்டுகிற இலாபத்தை தங்களது பால் உற்பத்தியாளர்களுடன் பகிர்ந்து கொள்கின்றன.

**செயலிழந்த சங்கங்களை மறுமலர்ச்சி செய்ய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்:**

தற்போது பால் வளத்துறையில் 4171 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் செயலிழந்த நிலையில் உள்ளன. தற்போது 2 ஆண்டுகளுக்கும் குறைவாக செயலிழந்துள்ள 2130 செயலற்ற சங்கங்களை மறுமலர்ச்சி செய்யவும், 2 ஆண்டுகளுக்கும் மேலாக செயலிழந்துள்ள 2041 செயலற்ற சங்கங்களுக்கு மாற்றாக புதிய பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களை அமைக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கால்நடை தீவனம் மற்றும் தாது உப்புக் கலவை மற்றும் ஒவ்வொரு சங்கத்திற்கும் 2 பால் கேன்கள் மான்ய விலையில் வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன. பால்பண்ணை தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம் (DEDS) மற்றும் இதர அரசு திட்டங்களின் கீழ் கறவை மாடுகள் வாங்க மான்யத்துடன் கூடிய கடனுதவி பெற பரிந்துரை செய்வதன் மூலம் கறவை மாடுகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் திட்டமிடப் பட்டுள்ளது.


பாலின் தரத்திற்கேற்ப உடனுக்குடன் பால்கொள்முதல் விலை வழங்கப்படுவதை உறுதி செய்வதன் மூலம் தனியார் பால் நிறுவனங்களுக்கு தற்போது பால் ஊற்றி வரும் பால் உற்பத்தியாளர்களை கவர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்படி நடவடிக்கைகள் மூலமாக செயலிழந்த பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களை படிப்படியாக மறுமலர்ச்சி செய்யவும் அதன் மூலமாக பால் உற்பத்தியை அதிகரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களின் மூன்றடுக்கு அமைப்பு**

| | |
|---|---|
| **அடுக்கு–1** கிராம அளவில் | கிராமத்தின் 25 உறுப்பினர்கள் ஒன்று சேர்ந்து ஒரு தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தை துவக்கலாம். 3 அடுக்கு அமைப்பில் அடிப்படை நிலையில் அமையும் இச்சங்கங்கள், பால் உற்பத்தியாளர் உறுப்பினர்களிடமிருந்து பால் கொள்முதல் செய்து அவை உறுப்பினர்களாக உள்ள மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களுக்கு அனுப்பி வைக்கின்றன. |
| **அடுக்கு–2** மாவட்ட அளவில் | மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள், மாவட்ட அளவில் இடைநிலை கூட்டுறவு சங்கங்களாகும். இதில், சம்பந்தப்பட்ட ஒன்றிய விவகார எல்லையில் உள்ள அனைத்து கிராம அளவிலான |

| | |
|---|---|
| | தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களும் உறுப்பினராக உள்ளன. ஒன்றியம் தொடக்க பால் கூட்டுறவு சங்கங்களிலிருந்து உபரி பாலை கொள்முதல் செய்து, பதப்படுத்தி, உள்ளூர் பால் நுகர்வோருக்கு விற்பனை செய்வதுடன், அதிகப்படியான பாலை சென்னை மாநகர பால்பண்ணைகள் / சமச்சீர் பால் பண்ணைகளுக்கும் விற்பனைக்காகவும், பால்பொருட்கள், வெண்ணெய் மற்றும் பால்பவுடராக உருமாற்றம் செய்யவும் அனுப்புகிறது. |
| **அடுக்கு–3**<br>மாநில அளவில் | தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மாநில அளவில் தலைமைச் சங்கமாகும். அனைத்து மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் இதில் உறுப்பினர்களாக உள்ளனர். தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம், சென்னை மாநகரத்தில் நேரடியாக பால் மற்றும் பால் உபபொருட்களை விற்பனை செய்வதோடு மட்டுமல்லாமல், மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் தயாரிக்கப்படும் பால் மற்றும் பால் பொருட்களை **“ஆவின்”** என்ற வணிக பெயரில் சந்தைபடுத்தி வருகிறது. |




### தொடக்க பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள்

சுகாதாரமான, தரமான பால் மற்றும் பால் பொருட்களை பால் நுகர்வோருக்கு நியாயமான விலையில் குறித்த நேரத்தில் முறையாக சென்றடைவதை உறுதி செய்வதற்காக பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. அவை இணையம் / மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள்

ஒன்றியங்களிலிருந்து பால் பாக்கெட்டுகள் மற்றும் பால் பொருட்களை பெற்று பால் நுகர்வோருக்கு வழங்குகின்றன.

மாநிலம் முழுவதும் 62 பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள் இயங்கி வருகின்றன. சென்னை மாநகரம் மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் மட்டும் 49 பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள், நாளொன்றுக்கு சுமார் 3.17 லட்சம் லிட்டர் பால் விற்பனை செய்கின்றன.

## 3.2. மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள்

தமிழகத்தில் அனைத்து வருவாய் மாவட்டங்களையும் உள்ளடக்கி, 17 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் இயங்கி வருகின்றன. இம்மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் நிர்வாகம், தலைவர் தலைமையிலான தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக்குழு மூலம் நிர்வகிக்கப்படுகின்றது. பொது மேலாளர், இம்மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் நிர்வாக அமைப்பின் தலைவர் ஆவார். மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் பணியாளர்களின் அங்கீகரிக்கப் பட்ட பணிநிலை தொகுப்பு பின்வருமாறு:-

**அட்டவணை1**

**மாவட்ட பால் உற்பத்தியாளர்கள்கூட்டுறவு ஒன்றியங்களின் பணியாளர்களின் அங்கீகரிக்கப்பட்ட பணிநிலை திறன்**

| வ. எண் | பதவியின் பெயர் | பணியிடம் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | பொது மேலாளர் | 17 |
| 2 | துணைப் பொது மேலாளர் | 23 |
| 3 | உதவிப் பொது மேலாளர் | 83 |
| 4 | மேலாளர் | 379 |
| 5 | துணை மேலாளர் | 330 |
| 6 | விரிவாக்க அலுவலர் | 302 |
| 7 | அலுவலகப் பணியாளர்கள் | 533 |
| 8 | ஓட்டுநர்கள் | 255 |
| 9 | தொழில்நுட்ப பணியாளர்கள் மற்றும் உதவியாளர்கள் | 2,349 |
| | **மொத்தம்** | **4,271** |

இம்மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள், பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களிடமிருந்து பால் கொள்முதல் செய்து, அதனை பால் சேகரிப்பு வழித்தட வாகனங்கள் மூலம் அருகிலுள்ள தொகுப்பு பால் குளிர்விப்பு மையம் / குளிரூட்டும் நிலையம் / பால் பண்ணைக்கு பதப்படுத்த அனுப்பி வைக்கின்றன. துணைப்பதிவாளர் (பால்வளம்) கிராம அளவில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் அமைக்கப்பதற்கும்

மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் உதவுகின்றன.

மாவட்ட ஒன்றியங்கள், உள்ளூர் பால் தேவையை பூர்த்தி செய்தது போக, எஞ்சிய பாலை, பதப்படுத்தி சென்னையில் விற்பனை செய்வதற்காக இணையத்தின் மாநகர பால் பண்ணைகளுக்கு அனுப்பி வைக்கின்றன. மேலும் உபரியாக உள்ள பால், வெண்ணெய் மற்றும் பால்பவுடர் தயாரிக்க ஏதுவாக மதுரை, ஈரோடு, சேலம், கிருஷ்ணகிரி மற்றும் திருவண்ணாமலையில் உள்ள சமன்படுத்தும் பால்பண்ணைகளுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது. கடந்த **2017–18** ஆம் ஆண்டில், இந்த சமன்படுத்தும் பால் பண்ணைகள், உபரி பாலிலிருந்து **20,927** மெட்ரிக் டன் பால்பவுடர் மற்றும் **11,502** மெட்ரிக் டன் வெண்ணெய் உற்பத்தி செய்துள்ளன.

### 3.2.1. பால் கொள்முதல்

கடந்த **2016–17** ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு **28.50** இலட்சம் லிட்டராக இருந்த சராசரி பால் கொள்முதல், **2017–18**ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு **29.46** இலட்சம் லிட்டராக உள்ளது. இது கடந்த ஆண்டைக் காட்டிலும் **3.37** சதவிகிதம்

உயர்வாகும். முன் எப்போதும் இல்லாத அளவில் **21.09.2017** அன்று, **33.01** இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்து சாதனை படைக்கப்பட்டுள்ளது.

கடந்த சில ஆண்டுகளில் பால் கொள்முதல் செய்த விவரம் பின்வருமாறு:

## அட்டவணை 2

**மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின்பால் கொள்முதல்**

| வ. எண். | ஆண்டு | நாளொன்றுக்கு சராசரி பால் கொள்முதல் (இலட்சம் லிட்டரில்) |
|---|---|---|
| 1 | 2010–2011 | 20.67 |
| 2 | 2011–2012 | 21.40 |
| 3 | 2012–2013 | 24.36 |
| 4 | 2013–2014 | 23.22 |
| 5 | 2014–2015 | 23.68 |
| 6 | 2015–2016 | 28.97 |
| 7 | 2016–2017 | 28.50 |
| 8 | 2017–2018 | 29.46 |

நாளொன்றுக்கு **30.50** இலட்சம் லிட்டர் என்ற அளவிற்கு பால் கொள்முதல் அளவை உயர்த்துவதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**2011–2012 முதல் 2017–2018 வரை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின்பால் கொள்முதல் (நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில்)**



**அட்டவணை 3**

**மாவட்ட ஒன்றியம் வாரியாக பால்கொள்முதல்**

**(நாளொன்றுக்கு சராசரி லிட்டர்) (இணைப்பு–I)**

| வ. எண் | ஒன்றியத்தின்பெயர் | 2016–17 | 2017–18 |
|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் – திருவள்ளூர் | 97812 | 111775 |
| 2 | விழுப்புரம் | 209878 | 216913 |
| 3 | வேலூர் | 305089 | 321662 |
| 4 | தர்மபுரி | 178698 | 190177 |
| 5 | சேலம் | 497708 | 529493 |
| 6 | ஈரோடு | 299428 | 291956 |
| 7 | கோயம்புத்தூர் | 262369 | 244319 |
| 8 | நீலகிரி | 14223 | 12861 |
| 9 | மதுரை | 259329 | 276340 |
| 10 | திண்டுக்கல் | 63575 | 59693 |
| 11 | திருச்சிராப்பள்ளி | 411508 | 434652 |
| 12 | தஞ்சாவூர் | 52,466 | 56868 |
| 13 | புதுக்கோட்டை | 42810 | 48639 |
| 14 | சிவகங்கை | 61435 | 57513 |
| 15 | விருதுநகர் | 16663 | 17547 |
| 16 | திருநெல்வேலி | 69193 | 69456 |
| 17 | கன்னியாகுமரி | 7570 | 5738 |
| | **மொத்தம்** | **2849755** | **2945602** |

### 3.2.2. பால் விற்பனை

**2016–17**ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு **9.52** இலட்சம் லிட்டராக இருந்த சராசரி பால் விற்பனை, **2017–18** ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு **10.00** இலட்சம் லிட்டராக உயர்ந்து உள்ளது**.** இது கடந்த ஆண்டைவிட **4.5** சதவிகிதம் உயர்வாகும்**.**

மேலும் விற்பனையை அதிகரிக்க விற்பனை விரிவாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, **11** இடங்களில் புதியதாக விற்பனை மண்டலங்களும் உருவாக்கப்பட்டுள்ளன**.** மேலும் **2018–19** ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு **10.50** இலட்சம் லிட்டர் பால் விற்பனை செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது**.**

கடந்த சில ஆண்டுகளில் பால் விற்பனை செய்த விவரம் பின்வரும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது:

## அட்டவணை 4

**மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் வாரியாக பால் விற்பனை**

| வ. எண் | ஒன்றியத்தின் பெயர் | (நாளொன்றுக்கு சராசரி பால் விற்பனை லிட்டரில்) | |
|---|---|---|---|
| | | 2016–17 | 2017–18 |
| 1 | காஞ்சிபுரம் – திருவள்ளூர் | 12,576 | 18,653 |
| 2 | விழுப்புரம் | 21,329 | 21,643 |
| 3 | வேலூர் | 69,173 | 72,039 |
| 4 | தர்மபுரி | 24,953 | 27,343 |
| 5 | சேலம் | 1,89,922 | 1,95,938 |
| 6 | ஈரோடு | 66,114 | 65,608 |
| 7 | கோயம்புத்தூர் | 1,42,015 | 1,52,050 |
| 8 | நீலகிரி | 16,493 | 16,486 |
| 9 | மதுரை | 1,56,317 | 1,62,727 |
| 10 | திண்டுக்கல் | 10,757 | 14,559 |
| 11 | திருச்சிராப்பள்ளி | 1,17,873 | 1,17,830 |
| 12 | தஞ்சாவூர் | 22,440 | 26,054 |
| 13 | புதுக்கோட்டை | 11,616 | 13,127 |
| 14 | சிவகங்கை | 28,952 | 33,518 |
| 15 | விருதுநகர் | 5,127 | 5,381 |
| 16 | திருநெல்வேலி | 41,926 | 42,359 |
| 17 | கன்னியாகுமரி | 15,348 | 15,638 |
| | **மொத்தம்** | **9,52,931** | **10,00,953** |

## 4. தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்

மூன்று அடுக்கு பால் கூட்டுறவு அமைப்பில், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம், மாநில அளவிலான ஒரு தலைமை சங்கமாகும். **01.02.1981**ல் ஆரம்பிக்கப்பட்ட இந்த இணையம், அதுவரை இயங்கி வந்த தமிழ்நாடு பால்வள நிறுவனத்தால் (TNDDC) மேற்கொள்ளப்பட்டு வந்த வணிக நடவடிக்கைகளான, பால் கொள்முதல், பதனிடுதல், சிப்பம் கட்டுதல், நுகர்வோருக்கு பால் மற்றும் பால் உப பொருட்களை விற்பனை செய்தல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகிறது. இதன் தலைமை அலுவலகம், சென்னை மாதவரம் பால்பண்ணையில் உள்ள ஆவின் இல்லத்தில் அமைந்துள்ளது. இணையத்தின் ஒட்டுமொத்த நிர்வாக பணிகளை மேற்கொள்ள இணையத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழுவிற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. தற்போதைய நிர்வாகக்குழு **17.07.2013** அன்று பொறுப்பேற்றுள்ளது. இணையத்தின், தினசரி நிர்வாக செயல்பாடுகள், நிர்வாக இயக்குநர் அவர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இணையம், பல்வேறு மாவட்ட ஒன்றியங்களிலிருந்து பால் கொள்முதல் செய்து, சென்னை மாநகரப் பகுதி பால் நுகர்வோர் தேவையை பூர்த்தி செய்யும் விதமாக விற்பனை செய்கிறது. இணையம், விற்பனை உதவி உள்ளிட்ட அனைத்து தேவையான தொழில்நுட்ப உதவிகளையும், ஒன்றியங்களுக்கு அளித்து வருகிறது. இணையத்தின் கட்டுப்பாட்டில், சென்னையில் மாதவரம், அம்பத்துார் மற்றும் சோழிங்கநல்லூர் ஆகிய 3 பால் பண்ணைகளும், அம்பத்துாரில் ஒரு பால் பொருட்கள் தயாரிப்பு தொழிற்சாலையும் மற்றும் திருவண்ணாமலையில் பால்பண்ணை மற்றும் பால்பவுடர் தொழிற்சாலை ஒன்றும் இயங்கி வருகின்றன. தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் பணியாளர்களின் அங்கீகரிக்கப்பட்ட பணிநிலை தொகுப்பு பின்வருமாறு:—

## அட்டவணை 5

## தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் நிர்வாகம்

**பணிநிலை திறன்**

| வ. எண். | பதவியின் பெயர் | பணியிடம் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | நிர்வாக இயக்குநர் | 1 |
| 2 | இணை நிர்வாக இயக்குநர் | 1 |
| 3 | தலைமை விழிப்பு பணி அலுவலர் | 1 |
| 4 | பொது மேலாளர் | 9 |
| 5 | துணைப் பொது மேலாளர் | 24 |
| 6 | உதவிப் பொது மேலாளர் | 60 |
| 7 | மேலாளர் | 108 |
| 8 | துணை மேலாளர் | 173 |
| 9 | செயல் அலுவலர் | 448 |
| 10 | ஓட்டுநர் | 234 |
| 11 | தொழில்நுட்ப பணியாளர் மற்றும் உதவியாளர் | 1,031 |
| | **மொத்தம்** | **2,090** |

### 4.1. இணையத்தால் நடத்தப்படும் பால்பண்ணைகள்

### 4.1.1. மாதவரம் பால்பண்ணை

தமிழ் நாட்டில் மிக பழமையான பால் பண்ணையான மாதவரம் பால்பண்ணை, நாளொன்றுக்கு **50,000** லிட்டர் கையாளும் திறனுடன், நியூசிலாந்து அரசின் நிதியுதவியுடன் கொழும்பு திட்டத்தின் கீழ், **1962**ஆம் ஆண்டில் துவக்கப்பட்டது.

கடந்த ஆறு ஆண்டுகளில் ரூ.7 கோடி செலவில் உட்கட்டமைப்பு வலுப்படுத்தப்பட்டதன் மூலம் தற்போது இப்பால் பண்ணையின் கையாளும் திறன், நாளொன்றுக்கு 5 இலட்சம் லிட்டர் என்ற அளவிற்கு அதிகரிக்கப்பட்டுள்ளது.

மாதவரம் பால்பண்ணை, வடசென்னை பால் நுகர்வோருக்கு, பதப்படுத்திய பாலை, 47 வாடகை தட வண்டிகள், 23 தனியார் முகவர் வண்டிகள் மற்றும் 3 இணைய பால் வழித்தடங்கள் மூலம் விநியோகிக்கிறது.

இந்த பால் பண்ணை IS/ISO 9001:2008, IS 15000:1998 (HACCP) மற்றும் IS/ISO 14001:2004(EMS) தரச் சான்றுகள் பெற்றுள்ளது. 2018–19 ஆம் ஆண்டில் பால் பாக்கெட் குளிர்பதன இருப்பு அறை வசதிகள் வலுப்படுத்தப்படும்.

**4.1.2. அம்பத்தூர் பால்பண்ணை**

அம்பத்தூர் பால்பண்ணை, நாளொன்றுக்கு 2 லட்சம் லிட்டர் கொள்ளளவுடன் 1976 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. மத்திய சென்னை நுகர்வோர்களின் தேவையை பூர்த்தி செய்யும் விதத்தில் கடந்த 6 ஆண்டுகளில் ரூ.7.5 கோடி

செலவில் உட்கட்மைப்புகள் வலுப்படுத்தப்பட்டு இப்பால்பண்ணையின் கையாளும் திறன் நாளொன்றுக்கு **5** இலட்சம் லிட்டராக உயர்ந்துள்ளது.

அம்பத்தூர் பால்பண்ணை, மத்திய சென்னை பால் நுகர்வோருக்கு, பதப்படுத்திய பாலை, **45** வாடகை தட வண்டிகள், **33** தனியார் முகவர் வண்டிகள், **7** இணைய வண்டிகள் மற்றும் **5** பால் நுகர்வோர் கூட்டுறவு சங்க பால் வழித்தடங்கள் மூலம் விநியோகிக்கிறது.

இந்த பால்பண்ணை IS/ISO 9001:2008, IS 15000:1998 (HACCP) மற்றும் IS/ISO 14001:2004(EMS) தரச் சான்றுகள் பெற்றுள்ளது. நடப்பு ஆண்டில் பால் பாக்கெட் குளிர்பதன இருப்பு அறை வசதிகள் வலுப்படுத்தப்படும். தற்போதுள்ள கழிவு நீர் சுத்திகரிப்பு ஆலையின் திறனை நாளொன்றுக்கு **4** இலட்சம் லிட்டர் என்ற அளவிலிருந்து நாளொன்றுக்கு **7** இலட்சம் லிட்டர் என்ற அளவிற்கு விரிவாக்கம் செய்யும் பணிகள் முடிவுற்றுள்ளன.

### 4.1.3. சோழிங்கநல்லூர் பால்பண்ணை

தென்னிந்தியாவின் முதல் கணினி மயமாக்கப்பட்ட சோழிங்கநல்லூர் தானியங்கி பால்பண்ணை, நாளொன்றுக்கு 4 லட்சம் லிட்டர் பால் கொள்ளளவு திறனுடன் 1996ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. ஆரம்ப காலத்தில், தானியங்கி பால் வழங்கும் நிலையங்கள் மூலம் நாளொன்றுக்கு 3.50 இலட்சம் லிட்டர் பால், மொத்த பால் விற்பனைக்காக, லாரிகள் மூலமாகவும், 50,000 லிட்டர் பாலை பாக்கெட் பாலாகவும் விற்பனை செய்யவும் திட்டமிடப்பட்டு, இப்பால் பண்ணை ஏற்படுத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து, பின்னர் ஏற்பட்ட மாறுபட்ட சந்தை சூழ்நிலை மற்றும் தேவைக்கேற்ப படிப்படியாக மொத்த பால் விற்பனையிலிருந்து பாக்கெட் பால் விற்பனைக்கு மாற்றப்பட்டது. தற்போது, இப் பால் பண்ணை நாளொன்றுக்கு 4.50 இலட்சம் லிட்டர் பால் கையாண்டு வருகிறது.

தென் சென்னை மற்றும் புறநகர் நுகர்வோர்களின் பெருகி வரும் தேவையை பூர்த்தி செய்யும் விதத்தில் கடந்த ஏழு (2011–18) ஆண்டுகளில் ரூ.10 கோடி செலவில் உட்கட்டமைப்புகள் வலுப்படுத்தப்பட்டதன் மூலம் இப் பால்

பண்ணையின் கையாளும் திறன் தற்போது நாளொன்றுக்கு 6 இலட்சம் லிட்டராக உயர்ந்துள்ளது.

சோழிங்கநல்லூர் பால்பண்ணை, தென் சென்னை பால் நுகர்வோருக்கு, பதப்படுத்திய பாலை, 40 வாடகை தட வண்டிகள், 44 தனியார் முகவர் வண்டிகள், 4 பால் நுகர்வோர் கூட்டுறவு சங்க பால் வழித்தடங்கள் மற்றும் 5 இணைய வண்டிகள் மூலம் விநியோகிக்கிறது.

மேலும், தற்போது நாளொன்றுக்கு பயன்படுத்தப்பட்டு வரும் 100–110 லிட்டர் எரி எண்ணெய்க்கு பதிலாக, நாளொன்றுக்கு 1000–1100 கிலோ நீராவி தயாரிக்கும் திறன் கொண்ட சூடுநீர் தயாரிக்கும் புதிய சூரிய ஒளி செறிவூட்டி ரூ.100 இலட்சம் செலவில் நிறுவப்பட்டு, ஆண்டொன்றுக்கு ரூ.12 லட்சம் சேமிக்கப்படுகிறது.

இந்த பால்பண்ணை IS/ISO 9001:2008, IS 15000:1998 (HACCP) மற்றும் IS/ISO 14001:2004(EMS) தரச் சான்றுகள் பெற்றுள்ளது.

தற்போதுள்ள கழிவு நீர் சுத்திகரிப்பு ஆலையின் திறனை நாளொன்றுக்கு 4.5 இலட்சம் லிட்டர் என்ற

அளவிலிருந்து நாளொன்றுக்கு 7 இலட்சம் லிட்டர் என்ற அளவிற்கு விரிவாக்கம் செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 4.1.4. திருவண்ணாமலை பால்பண்ணையுடன்கூடிய பால்பவுடர் தொழிற்சாலை

திருவண்ணாமலை மாவட்டம், அம்மாபாளையம் கிராமத்தில், நபார்டு வங்கி நிதியுதவியுடன் ரூ.72.60 கோடி செலவில், நாளொன்றுக்கு 2 லட்சம் லிட்டர் பால் கையாளும் திறனுள்ள பால்பண்ணை மற்றும் 20 மெட்ரிக் டன் பால்பவுடர் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையத்தின் ஒரு அலகாக 11.11.2014 முதல் இயங்கி வருகிறது.

புதிதாக, 250 மெட்ரிக் டன் வெண்ணெய் மற்றும் 500 மெட்ரிக் டன் பால்பவுடர் சேமித்து வைக்கக்கூடிய கூடுதல் கிடங்கு ரூ.476.50 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது. அது தொடர்பான கன்வேயர் மற்றும் மின்சாரப் பணிகள் நிறைவு பெற்றுள்ளன. இந்த பால்பண்ணை ISO 22000:2005 (FSMS) தரச் சான்று பெற்றுள்ளது. 2017–18 ஆம் ஆண்டில் நெய் தயாரிப்பு துவக்கப்பட்டுள்ளது.

### 4.1.5. அம்பத்தூர் பால் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை

சென்னை பெருநகர நுகர்வோருக்கு பலதரப்பட்ட பால்பொருட்கள் மற்றும் தனது உபபொருட்கள் வழங்குவதை அம்பத்தூர் பால்பொருட்கள் பண்ணை உறுதி செய்கிறது.

பால் பொருட்கள் பண்ணை புத்துணர்ச்சியுடன் கூடிய தரமான பொருட்கள் அனைத்து விற்பனையகங்களிலும் பொருட்கள் கிடைப்பதையும் உறுதிசெய்கிறது.

பால் பொருட்கள் மற்றும் உபபொருட்களின் தரம், சர்வதேச தர நிறுவனத்தின் ISO சான்று, இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர ஆணையத்தின் FSSAI சான்று மற்றும் HACCP சான்று ஆகியவற்றின் அடிப்படையில் தரமாக உள்ளதை உறுதிசெய்யப்படுகிறது.

சென்னை அயனாவரத்தில் 1976ஆம் ஆண்டு முதல் இயங்கி வந்த பால் பொருட்கள் தொழிற்சாலை அம்பத்தூருக்கு மாற்றப்பட்டு, 2003ஆம் ஆண்டு முதல் அம்பத்தூர் பால் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை இயங்கி வருகிறது. சென்னை அம்பத்தூரில் ரூ.23.46 கோடி செலவில் புதியதொரு பால் பொருட்கள் தொழிற்சாலை

2015 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இப்புதிய பால் பொருட்கள் தொழிற்சாலை, நாளொன்றுக்கு 15,000 லிட்டர் ஐஸ்கீரிம் மற்றும் 1000 கிலோ பனீர் தயாரிக்கும் திறன் கொண்டது.

அதே வளாகத்தில் நாளொன்றுக்கு 40,000 லிட்டர் நொதித்தல் முறையில் பால் பொருட்கள் (தயிர், மோர், லஸ்சி, போன்றவை) தயார் செய்யும் அலகு ரூ.9.18 கோடி மதிப்பில் கட்டி முடிக்கப்பட்டு 21.09.2016 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

அம்பத்தூர் பால் பொருட்கள் பண்ணையிலிருந்து 60 வகையான பால் பொருட்கள் 117 வகைகளில் தயார்செய்யப்பட்டு 28 ஒப்பந்த வாகனங்கள் மற்றும் 5 குளிர் பதன வாகனங்கள் மூலம் சில்லரை விற்பனை நிலையங் களுக்கு விநியோகிக்கப்படுகின்றன. ஐஸ்கிரீம் மற்றும் இதர பால் பொருட்களும் 3 குளிரூட்டும் வாகனங்கள் மூலமாக மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களுக்கும் அனுப்பி வைக்கப்படுகின்றன.

மாவட்ட ஒன்றியங்களுக்கு ஐஸ்கிரீம் வகைகளை கொண்டு செல்ல மேலும் 3 குளிர்பதன வாகனங்கள் ரூ. 81 இலட்சம் செலவில் பயன்பாட்டிற்கு கூடுதலாக

சேர்க்கப்பட்டு **19.05.2017** அன்று மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் அவர்களால் கொடியசைத்து துவக்கி வைக்கப்பட்டது. ஆவின், **19.04.2017** அன்று **1/2** கிலோ தயிர் பாக்கெட்டுகளை அறிமுகப்படுத்தியுள்ளது. அதைத் தொடர்ந்து ஒரு கிலோ பக்கெட் பிரிமியம் தயிர், ரசகுல்லா ஆகியன **27.06.17**ல் அறிமுகப்படுத்தியுள்ளது. திராட்சை டுயட், மேங்கோ கோன், ஸ்ட்ராபெர்ரி கோன் மற்றும் **2** in **1** போன்ற புதிய வகை ஐஸ்கிரீம்கள் **08.09.2017** அன்று அறிமுகப்படுத்தப்பட்டன.

பின்வரும் வேறுபட்ட பால் உபபொருட்களும் **20.04.2018** அன்று அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன

1. பனீர் **1/2** கிலோ மற்றும் **1** கிலோ பாக்கெட்.
2. பிரிமியம் தயிர் **400** கி கப்
3. சாக்லேட் ரிப்பில் ஐஸ்கிரீம் **500** மிலி
4. ஸ்ட்ராபெர்ரி ரிப்பில் ஐஸ்கிரீம் **500** மிலி
5. சர்க்கரையில்லா குல்ஃபி **70** மிலி
6. சர்க்கரையில்லா ஐஸ்கிரீம் **100** மிலி (வெணிலா)

நுகர்வோர் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் புதுவகை சாக்லேட்கள், பிஸ்கேட்டுகள், டின் பாக்கெட்டுகளில் ரசகுல்லா மற்றும் குலோப்ஜாமுன், நீண்ட நாள் கெடா வகை கோவா ஆகியன அறிமுகப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் பின்வரும் புதிய பொருட்களை மேலும் மேம்படுத்துவதற்கு சோதனை தயாரிப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1. பல்வேறு நறுமணங்களில் டயட் யோகர்ட் மற்றும் சர்க்கரையில்லா யோகர்ட்

2. பல்வேறு நறுமணங்களில் குல்ஃபி மற்றும் சர்க்கரையில்லா குல்ஃபி

3. பல்வேறு நறுமணங்களில் 'வே' குளிர்பானங்கள்

தற்போது நாளொன்றுக்கு சராசரி விற்பனையான 6000 லிட்டர் என்ற அளவிலிருந்து நாளொன்றுக்கு 10000 லிட்டர் என்ற அளவிலான நமது இலக்கை அடைவதற்கு தற்போது தீவிர சந்தைப்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

# ஆவின்பால் பொருட்களின்வகைகள்

| இனிப்புகள் | ஐஸ் கிரீம் வகைகள் | நொதியூட்டப்பட்ட பால்பொருட்கள் | கூழ்ம பொருட்கள் மற்றும் பிற |
|---|---|---|---|
| • இனிப்பு கோவா<br>• பேரிச்சை கோவா<br>• மைசூர் பா<br>• நீண்ட நாள் கெடா குலோப் ஜாமூன்<br>• பால் பேடா | • கப் ஐஸ் கிரீம்<br>• குடும்ப சிப்பம்<br>• கசட்டா<br>• பந்து ஐஸ் கிரீம்<br>• சாக்கோபார்<br>• மாங்கோ டூயட்<br>• பைனாப்பிள் டூயட்<br>• திராட்சை டூயட்<br>• 2 in 1 பார்<br>• ஸ்ட்ராபெர்ரி கோன்<br>• மாங்கோ கோன்<br>• சாக்கோ பீஸ்ட்<br>• சாக்லேட் கோன்<br>• வெணிலா கோன்<br>• கிளாசிக் கோன்<br>• குல்பி பார்<br>• ஐஸ் கேன்டி (6 வகைகள்)<br>• பிரிமியம் வகை கப் ஐஸ் கிரீம்<br>• பிரிமியம் வகை ஸ்கூப் ஐஸ்கிரீம் | • இனிப்பூட் டப் பட்ட யோகர்ட்<br>• பாக்கெட் தயிர்<br>• சிறப்பு தயிர் கப்புகள்<br>• பாக்கெட் லஸ்சி<br>• புரோபயோ டிக் தயிர்<br>• புரோபயோ டிக் லஸ்சி<br>• பாக்கெட் மோர்<br>• பக்கெட் தயிர் | • பனீர்<br>**பிற**<br>• இனிப்பு இல்லா கோவா<br>• நட்டி சாக்லேட்<br>• பால் சாக்லேட்<br>• நறுமண பால் |

## 4.2. தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தால் நடத்தப்படும் சேவை நிறுவனங்கள்

### கருவூலக ஜெர்சி மற்றும் பொலிகாளை பண்ணை – உதகமண்டலம்

கருவூலக ஜெர்சி மற்றும் பொலிகாளை பண்ணை **1973** ஆம் ஆண்டு உதகமண்டலத்தில் நிறுவப்பட்டது. இப்பண்ணை, பொலிகாளைகள் தாய்ப்பண்ணை மற்றும் பொலிகாளை பண்ணை ஆகிய இரண்டு பிரிவுகளுடன் இயங்கி வருகிறது. பொலிகாளைப் பண்ணை, வனத் துறையிடமிருந்து குத்தகைக்கு எடுக்கப்பட்ட **37.725** ஏக்கர் நிலப்பரப்பிலும், பொலிகாளைகளின் தாய்ப் பண்ணை, வருவாய்த் துறைக்குச் சொந்தமான **46.33** ஏக்கர் நிலப்பரப்பிலும் இயங்கி வருகின்றன.

### பொலிகாளைகளின்தாய் பண்ணை

கால்நடை இன விருத்திக்கான நல்ல தரமான உறைவிந்து குச்சிகளை உற்பத்தி செய்வதற்குத் தேவையான, அதிக மரபுத்திறன் கூடிய கலப்பின ஜெர்சி காளைகளை

உற்பத்தி செய்யக் கூடிய உயர்ரக ஜெர்சி பசுக்கள் இங்கு பராமரிக்கப்பட்டு வருகின்றன. இப்பண்ணை அமைந்துள்ள காக்காத்தோப்பில், கால்நடைகளுக்குத் தேவையான தீவனத்திற்காக ஓட்ஸ், மைஸ் மற்றும் கிக்கியூ புல்வகைகள் பயிர் செய்யப்பட்டு வருகின்றன.

**பொலிகாளை பண்ணை**

உறைவிந்து குச்சிகளை உற்பத்தி செய்வதற்குத் தேவையான ஜெர்சி, கலப்பின ஜெர்சி, ஹால்ஸ்டீன் பிரீசியன் மற்றும் கலப்பின ஹால்ஸ்டீன் பிரீசியன் இன காளைகள் இங்கு பராமரிக்கப்படுகின்றன. இங்கு உற்பத்தியாகும் உறைவிந்து குச்சிகள், மாநிலத்தில் உள்ள அனைத்து மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களுக்கும் விநியோகிக்கப்பட்டு முறையே, ஒன்றியங்களின் கட்டுப்பாட்டில் உள்ள செயற்கை முறை கருவூட்டல் நிலையங்களில், பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களில் உள்ள உறுப்பினர்களின் கால்நடைகளுக்கு, செயற்கை முறை கருவூட்டல் செய்வதற்காக, அனுப்பி வைக்கப்படுகின்றன. தற்போது, கருவூலக ஜெர்சி மற்றும் பொலிகாளை பண்ணையில் இருக்கும் சுமார் 132 காளைகளில் 97 காளைகள்

உறைவிந்து சேகரிப்பிற்காக பயன்படுத்தப்படுகின்றன. இந்த பண்ணையில், வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட **10** ஜெர்சி பொலிகாளைகள் மற்றும் **1** ஹால்ஸ்டீன் பிரீசியன் பொலிகாளைகள் ஆக பதினொன்று பொலிகாளைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இப் பண்ணை, வருடத்திற்கு தோராயமாக **16.00** இலட்சம் உறைவிந்து குச்சிகள் உற்பத்தி செய்து வருகிறது.

**2018–19**ல், தோராயமாக **19.00** இலட்சம் உறைவிந்து குச்சிகள் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

**எருமை இன உறைவிந்து நிலையம் – ஈரோடு**

அனைத்து மாவட்ட ஒன்றியங்களின் தேவையின் அடிப்படையில், உதகமண்டலம் கருவூலக ஜெர்சி மற்றும் பொலிகாளை பண்ணையில் உற்பத்தி செய்யப்பட்ட பசு இன உறை விந்து குச்சிகள் இந்த நிலையத்தின் மூலம் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையத்தின் மூலம், தற்போது, மாதம் ஒன்றிற்கு தோராயமாக **1.70** இலட்சம் உறைவிந்து குச்சிகள் விநியோகிக்கப்பட்டு உள்ளது.

இந்நிலையம், கால்நடை பராமரிப்புத் துறையிடமிருந்து பிரதி மாதம் கொள்முதல் செய்யப்படும் சுமார் **6,000** எருமை

இன உறைவிந்து குச்சிகளையும், ஒன்றியங்களுக்கு விநியோகம் செய்து வருகின்றது.

வம்சாவழி சோதனைத் திட்டத்தின் மூலமாக உற்பத்தி செய்யப்பட்ட காளைக் கன்றுகளும் இங்கு பராமரிக்கப்பட்டு வருகின்றன.

2017–18 ஆம் ஆண்டில் கால்நடைகளின் தேவைக்காக தஞ்சாவூர் மாவட்டம் புதுக்குடியில் சுமார் 20 ஏக்கர் நிலப்பரப்பில் பசுந்தீவனம் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.

மேலும் 2018–19ம் ஆண்டில் தஞ்சாவூர் மாவட்டம் புதுக்குடியில் மேலும் 50 ஏக்கர் நிலப்பரப்பில் விரிவாக்கம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

**கறவை இன மேம்பாட்டு திட்டம் (Dairy Herd Improvement Programme Actions (DIPA), ஈரோடு**

கறவை இன மேம்பாட்டு திட்ட நடவடிக்கைகள் அலகும் ஈரோட்டில் செயல்பட்டு வருகிறது. இந்த அலகில் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன

**வம்சாவழி சோதனைத் திட்டம்** (Progeny Testing Programme-PTP)

அதிக மரபுத்திறன் கூடிய கலப்பின பொலிகாளைகளை தேர்ந்தெடுக்கும் பொருட்டு, சேலம், ஈரோடு, தருமபுரி, கோயம்புத்தூர், திருச்சி, மதுரை மற்றும் திருநெல்வேலி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில், இந்திய அரசின் நிதி உதவியுடன், வம்சாவழி சோதனைத் திட்டம், இணையம் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**களவெளி செயல்திறன்பதிவுத் திட்டம்** (Field Performance Recording Programme-FPRP)

களவெளி செயல்திறன் பதிவு திட்டத்தின் கீழ், கலப்பின ஜெர்சி இன கறவைகளின் பால் அளவைக் கணக்கிட்டு, திறன் நிரூபணம் செய்யப்பட்ட காளைகளின் உறைவிந்து மூலம் கரூவூட்டல் செய்யப்பட்டு, அதிக மரபுத்திறன் கூடிய கலப்பின பொலிகாளை கன்றுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

இத்திட்டம், இந்திய அரசின் நிதி உதவியுடன், சேலம், தருமபுரி, ஈரோடு, கோயம்புத்தூர், திருச்சி, மதுரை,

திண்டுக்கல் மற்றும் திருநெல்வேலி ஆகிய **8** மாவட்ட ஒன்றியங்களில், இணையம் மூலம் செயல் படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் மூலம், கால்நடை பராமரிப்புத் துறை மற்றும் கூட்டுறவு அமைப்பின் கீழ் இயங்கி வரும் நான்கு உறைவிந்து குச்சி நிலையங்களுக்கு உறைவிந்து குச்சிகள் உற்பத்தி செய்ய, இதுவரை **352** ஜெர்சி கலப்பின காளைக் கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

## 4.3. இணையம் மற்றும் மாவட்ட ஒன்றியங்களால் நடத்தப்படும் அலகுகள்

### சமன்படுத்தும் பால்பண்ணைகள்

ஈரோடு, சேலம், கிருஷ்ணகிரி, மதுரை மற்றும் திருவண்ணாமலை ஆகிய **5** சமன்படுத்தும் பால் பண்ணைகள் தமிழகத்தில் இயங்கி வருகின்றன.

உபரி பாலை பால் பவுடராகவும், வெண்ணெய் ஆகவும் உருமாற்றம் செய்யும் பணிக்காக இந்த சமன்படுத்தும் பால்பண்ணைகள் நிறுவப்பட்டுள்ளன. அனைத்து சமன்படுத்தும் பால் பண்ணைகளின் மொத்த உலர்திறன்

நாளொன்றுக்கு 90 மெட்ரிக் டன் ஆகும். (ஈரோடு–40 மெ.டன்., சேலம்–10 மெ.டன்., கிருஷ்ணகிரி–10 மெ.டன்., மதுரை–10 மெ.டன். மற்றும் திருவண்ணாமலை –20 மெ.டன்.). மேலும், தேவைப்படும் பகுதிகளில் கூடுதல் பால்பவுடர் தொழிற்சாலைகளை நிறுவ இணையத்தால் திட்டமிடப் பட்டுள்ளது.

**ஈரோடு கால்நடை தீவன தொழிற்சாலை**

கறவை மாட்டின் உற்பத்தித்திறன் மற்றும் சினை பிடித்தலுக்கு கால்நடைத்தீவனம் வழங்குதல் முக்கிய பங்கு வகிக்கிறது. ஈரோடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், நாளொன்றுக்கு 100 மெட்ரிக் டன் உற்பத்தி திறன் கொண்ட கால்நடை தீவன தொழிற்சாலையை 1982ஆம் ஆண்டு முதல் இயக்கி வருகிறது. இத்தொழிற்சாலை, நாளொன்றுக்கு 150 மெட்ரிக்டன் கால்நடை தீவனம் உற்பத்தி செய்யும் வகையில் ரூ.20.36 கோடி செலவில் விரிவாக்கம் செய்யப்பட்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 18.03.2017 அன்று திறந்து வைக்கப்பட்டது.

ஈரோடு கால்நடை தீவன தொழிற்சாலையானது, 2016–17ம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட 22,695 மெட்ரிக் டன் கால்நடை தீவனத்தைவிட 66 சதவிகித வளர்ச்சியுடன் 2017–18 ஆம் ஆண்டில் 37,736 மெட்ரிக் டன் கால்நடைத் தீவனம் உற்பத்தி செய்துள்ளது. கடந்த ஏழு ஆண்டுகளில், ஆவின் மூலம் மாவட்ட ஒன்றியங்களால் விற்பனை செய்யப்பட்ட கால்நடைத் தீவனத்தின் அளவு 18 மடங்காக உயர்ந்துள்ளது.

2017–18ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்ட 72,000 மெட்ரிக் டன் கால்நடை தீவன விற்பனைக்கு அதிகமாக 81,531 மெட்ரிக் டன் கால்நடை தீவனம் வழங்கப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டை விட 34.16 சதவிதம் அதிகமாகும். பாலின் அளவு மற்றும் தரம் அதிகரிப்பதற்கு இது வழிவகுக்கும்.

**அட்டவணை 6**

**கால்நடை தீவனம் வழங்கிய விவரங்கள் (மெட்ரிக் டன்னில்)**

**(இணைப்பு–II)**

| ஆண்டு | மொத்தம் (மெட்ரிக் டன்) |
|---|---|
| 2010 – 11 | 4,612 |
| 2011 – 12 | 15,046 |
| 2012 – 13 | 31,093 |
| 2013 – 14 | 53,292 |
| 2014 – 15 | 51,702 |
| 2015 – 16 | 58,652 |
| 2016 – 17 | 60,770 |
| 2017–18 | 81,531 |

உறுப்பினர்களிடையே கால்நடைத் தீவனம் வழங்கப்படுவதை அதிகரிக்கும் வகையில் இதர நிறுவனங்கள் மூலமாகவும் கால்நடை தீவனம் கொள்முதல் செய்து விற்பனை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

2018–19 ஆம் ஆண்டில் கால்நடை தீவன விற்பனையை 1,00,000 மெட்ரிக் டன் ஆக உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது.

**தாது உப்புக் கலவைத் தொழிற்சாலை**

தாது உப்புக்கலவை, கால்நடைகளின் சினை பிடிப்புத் திறன், பாலின் தரம், மற்றும் கறவை மாடுகளின் உடல் ஆரோக்கியத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது. விழுப்புரம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் ஈரோடு ஆகிய இடங்களில் நான்கு தாது உப்புக்கலவை தொழிற் சாலைகள் இயங்கி வருகின்றன. 2017–18ஆம் ஆண்டில் 1,843 மெட்ரிக் டன் தாது உப்புக்கலவை வழங்கப்பட்டுள்ளது. 2018–19 ஆம் ஆண்டில் தாது உப்பு கலவை விற்பனையை 2,500 மெட்ரிக் டன் ஆக உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது.

## அட்டவணை 7

### தாது உப்புக் கலவை வழங்கிய விவரங்கள் 2011–18

**(மெட்ரிக் டன்னில் ) (இணைப்பு–III)**

| ஆண்டு | மொத்தம் (மெட்ரிக் டன்) |
|---|---|
| 2011 – 12 | 171. 60 |
| 2012 – 13 | 131.10 |
| 2013 – 14 | 390.67 |
| 2014 – 15 | 244.42 |
| 2015 – 16 | 966.08 |
| 2016 – 17 | 1,314.73 |
| 2017–18 | 1,843.79 |

தர்மபுரி ஒன்றியத்தில் நாளொன்றுக்கு 12 மெட்ரிக் டன் கொள்ளவு திறன் கொண்ட தாதுஉப்பு கலவை தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவும் பணி நடைபெற்று வருகிறது.

### 4.4. பல்வேறு துறைகளுடன் ஒருங்கிணைப்பு

#### (அ) கால்நடை பராமரிப்புத் துறை

ஆண்டிற்கு இருமுறை (மார்ச் மற்றும் செப்டம்பர்), கால்நடை பராமரிப்புத்துறையின் ஒத்துழைப்போடு கூட்டுறவு அமைப்பின் கீழ் உள்ள 17 இலட்சம் கறவை மாடுகளுக்கும் கோமாரி நோய் தடுப்பூசிகள் போடப்பட்டு வருகின்றன.

மாநில கால்நடை தீவன வளர்ச்சித்திட்டத்தின் கீழ் (SFDS) தீவனப்பயிர் விதைகள், அசோலா, ஹைட்ரோ போனிக்ஸ் புல்வெட்டி போன்ற இடுபொருட்கள் வழங்கப்பெற்றுள்ளன.

## (ஆ) தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை

தேசிய பொலிகாளை பராமரிப்புத் திட்டத்தின் கீழ் (NPBB) திரவ நைட்ரஜன் குப்பிகள், உறை விந்து குப்பிகள், செயற்கை கருவூட்டல் துப்பாக்கிகள் போன்ற இன வளர்ச்சி உட்கட்டமைப்பு வசதிகள் தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை மூலம் செயற்கை கருவூட்டல்கள் மேற்கொள்ள பால் கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கப்படுகிறது. இதுதவிர கால்நடை மருத்துவர்கள் மற்றும் கிராம அளவிலான செயற்கை முறை கருவூட்டல் பணியாளர்களுக்கும் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

மத்திய அரசின் தேசிய கால்நடை திட்டத்தின் கீழ் தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை மூலம் மானிய காப்பீட்டுத்தொகையுடன் கூடிய காப்பீட்டுத்திட்டம் பால் உற்பத்தியாளர்களின் கறவை மாடுகளுக்கு வழங்கப்படுகிறது.

சிறந்த கால்நடை வளர்ச்சிப் பழக்கங்கள், தூயபால் உற்பத்தி, கால்நடை பராமரிப்பு, சமச்சீர் தீவன திட்டம் மற்றும்

கால்நடை தீவனப்பயிர் மேம்பாடு, அசோலா மற்றும் ஹைட்ரோ போனிக்ஸ் பயிர் சாகுபடி உள்ளிட்ட முதன்மை தலைப்புகளில் முன்னோடி விவசாயிகளுக்கு கருத்தரங்கம், தொழிற்பயிற்சி கூடம் ஆகியவை அமைத்து பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

**(இ) தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பலக்லைக்கழகம்**

பால் உற்பத்தியாளர்களுக்கு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலை கழகத்தின் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்களில் உள்ள வசதிகளை பயன்படுத்தி சமீப காலத்திய தொழிற்நுட்ப வளர்ச்சி மற்றும் மேலாண்மை குறித்து திறன் மேம்பாட்டுப்பயிற்சி மற்றும் விரிவாக்க கல்வி வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

## 5. மாநில / மத்திய அரசு நிதியின்கீழ் மேற்கொள்ளப்படும் பால்பண்ணை வளர்ச்சி திட்டங்கள்

### 5.1. தேசிய பால்வள மேம்பாட்டுத்திட்டம்

இதுவரை செயல்பாட்டில் இருந்த திட்டங்களான, தரமான மற்றும் தூய பால் உற்பத்திக்கான கட்டமைப்பை வலுப்படுத்தும் திட்டம், தீவிர பால் பெருக்குத்திட்டம் மற்றும்

கூட்டுறவுகளுக்கு உதவுதல் – புனரமைப்பு திட்டம் ஆகியவைகள் ஒன்றாக இணைக்கப்பட்டு, 2014–15ம் ஆண்டு முதல், தேசிய பால்வள மேம்பாட்டுத் திட்டம் என ஒரே திட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தேசிய பால்வள மேம்பாட்டுத் திட்டத்தின் ஒரு அங்கமான தேசிய கால்நடை இனப்பெருக்கம் மற்றும் பால்வள மேம்பாட்டுத் திட்டமானது பால் பண்ணை மேம்பாட்டிற்கான நிதியுதவி மற்றும் தொழிற்நுட்ப உதவி ஆகியவற்றை வழங்கி அடிப்படை நிலையிலேயே உட்கட்டமைப்பு மேம்பாட்டிற்காக வடிவமைக்கப்பட்டது. பால் உற்பத்தி, கொள்முதல், பதப்படுத்துதல் மற்றும் இணைய மற்றும் ஒன்றியங்களின் பாலை விற்பனை செய்யவும் தேவையான உட்கட்டமைப்பை உருவாக்குதல் மற்றும் விவசாயிகளுக்கு பயிற்சி உள்ளிட்ட விரிவாக்க நடவடிக்கைகளை செயல்படுத்துவதே தேசிய பால்வள மேம்பாட்டுத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

தேசிய பால்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 2014–15 முதல் 2016–17 வரை, இணையம், திருச்சி மற்றும் மதுரை ஒன்றியங்களுக்கான 3 திட்டங்களுக்கு ரூபாய் 40.16 கோடி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. பெரம்பலூர் மாவட்டம்

பாடாலூரில் நாளொன்றுக்கு ஒரு இலட்சம் லிட்டர் பால் பதப்படுத்தும் திறன் கொண்ட புதிய பதப்படுத்தும் ஆலை அமைக்கப்பட்டது. இது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், 07.03.2017 அன்று துவக்கி வைக்கப்பட்டது. மதுரை பால் பண்ணையில், ஏற்கனவே இருந்த, பாலில் உள்ள நீரை ஆவியாக்கும் இயந்திர நிலையத்திற்கு (Milk condensing Plant) மாற்றாக, நாளொன்றுக்கு ஒரு இலட்சம் லிட்டர் பாலில் உள்ள நீரை ஆவியாகுக்கும் இயந்திரம் நிறுவப்பட்டுள்ளது.

இதுவரை, மொத்த திட்டத் தொகையான ரூ.18.08 கோடியில், இதுவரை ரூ. 17.74 கோடி பெறப்பட்டுள்ளது.

2017–18 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் ரூ 1574.40 இலட்சம் மானியத்துடன், மொத்தமாக ரூ. 2324.40 இலட்சம் அனுமதிக்கப்பட்டு, இது வரை ரூ.1180.00 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது. தேசிய பால்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 2017–18 ஆம் ஆண்டில் பின்வரும் இனங்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளன:–

பால் உற்பத்தியாளர்களது இல்லங்களிலேயே பால் பரிசோதனை வசதிகளை ஏற்படுத்தும் வகையில், தலா

ரூ. 1.25 இலட்சம் மதிப்பில் 504 தானியங்கி பால் சேகரிப்பு அலகுகள், தலா ரூ. 0.90 இலட்சம் மதிப்பில் 216 பால் சேகரிப்பு புள்ளி விவரங்கள் அலகுகள் ஒப்பளிக்கப்பட்டுள்ளன. அதற்கும் கூடுதலாக கிராம அளவில் பால் குளிரூட்டும் வசதிகளை மேம்படுத்த 50 சதவிகித மானியத்தில், 500 லிட்டர் கொள்ளளவு கொண்ட 92 மொத்த பால் குளிர்விப்பான்கள், 1000 லிட்டர் கொள்ளளவு கொண்ட 86 மொத்த பால் குளிர்விப்பான்கள், 2000 லிட்டர் கொள்ளளவு கொண்ட 22 மொத்த பால் குளிர்விப்பான்கள், 3000 லிட்டர் கொள்ளளவு கொண்ட 4 மொத்த பால் குளிர்விப்பான்கள் மற்றும் 5000 லிட்டர் கொள்ளளவு கொண்ட 6 மொத்த பால் குளிர்விப்பான்கள் ஆகியன ஒப்பளிக்கப்பட்டுள்ளன. இயந்திரங்கள் கொள்முதல் செய்யும் பணிகள் நடவடிக்கையில் உள்ளன. அவை அனைத்தும் செப்டம்பர் 2018க்கு முன்பாக நிறுவப்படும். மொத்த பால் குளிர்விர்பபான்களின் தற்போதைய குளிரூட்டும் திறனான நாளொன்றுக்கு 15.19 இலட்சம் லிட்டர் என்ற அளவிலிருந்து நாளொன்றுக்கு 19.12 இலட்சம் லிட்டர் என்ற அளவிற்கு நாளொன்றுக்கு 3.93 இலட்சம் லிட்டர் என்ற அளவு உயர்த்தப்படும்.

**5.2. தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின் கீழான நிதியுதவில் கடந்த 6 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட சில உட்கட்டமைப்பு மேம்பாடுகள்**

1. கூடுதலாக மூன்று இலட்சம் லிட்டர் பால் சேமிக்கத் தேவையான குளிரூட்டும் அறை வசதி

2. ஈரோடு, சேலம் மற்றும் கோயம்புத்தூரில் 894 மெட்ரிக் டன் கொள்ளளவில் வெண்ணெய் உறை கிடங்கு வசதி

3. வெப்பம் சார்ந்த அச்சுப்பொறியுடன் 25 அதிவேக மற்றும் 11 மித வேக புதிய பால் பைகள் நிரப்பும் இயந்திரங்கள்

4. அம்பத்தூர் பால் பொருட்கள் பண்ணையில் நாளொன்றுக்கு 15,000 லிட்டர் ஐஸ்கிரீம் மற்றும் 1,000 கிலோ பனீர் தயாரிக்கும் திறன் கொண்ட உற்பத்தி வசதி.

5. சேலம் பால் பண்ணையில் உயர் வெப்ப நிலையில் 200 மி.லி. பால் சிப்பம் (Tetra Pack)கட்டும் வசதி

6. சொந்த பால் போக்குவரத்து வசதிகள் வலுப்படுத்த 48 பால் டேங்கர்கள் கொள்முதல் செய்யப்பட்டன.

7. சேலம் பால் பண்ணையில், ஒரு மணி நேரத்தில் 1,000 மி.லி. ஆக 6,000 பால் சிப்பம் கட்டும் திறன் கொண்ட அழுகலற்ற (நோய் நுன்மங்கள் ஒழிக்கப் பெற்ற) நிரப்பும் இயந்திரம் (Aseptic filling machine)

8. 2011 ஆம் ஆண்டு முதல் 155 கால்நடை மருத்துவர்களை கொண்டு இல்லந்தேடி வரும் மருத்துவ வசதி திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் வாயிலாக 17 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களை சார்ந்த பால் உற்பத்தியாளர்களின் இல்லத்திலேயே கால்நடை மருத்துவ வசதி மற்றும் பராமரிப்பு சேவைகள் ஆகியன மேற்கொள்ளப்படுகின்றன. இதன் மூலம் உறுப்பினர்களிடையே விசுவாசம் ஏற்படுவதோடு, நல்ல கால்நடை பராமரிப்பு காரணமாக, பால் உற்பத்தியும் அதிகரிக்கும் நிலை ஏற்படுகிறது.

9. சேலம் ஒன்றியத்தில், கூடுதல் வெண்ணெய் மற்றும் UHT பால் பதப்படுத்துவதற்கும் சிப்பம் கட்டுதல் மற்றும்

சேமிப்பதற்கும் உட்கட்டமைப்பு வலுப்படுத்தப் பட்டுள்ளது. நீலகிரி ஒன்றியத்தில் 5 பால் விற்பனை நிலையங்கள் உருவாக்கப்பட்டுள்ளதோடு, பால் பண்ணையின் குளிரூட்டும் அமைப்பும் வலுப்படுத்தப் பட்டுள்ளது. விருதுநகர், தர்மபுரி மற்றும் திருநெல்வேலி மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் கொள்ளளவை சீரமைப்பதற்கு ஏதுவாக, அவற்றின் உட்கட்டமைப்புகள் வலுப்படுத்தப் பட்டுள்ளன.

10. 2017–18 ஆம் ஆண்டில், ரூ. 21.91 கோடி மதிப்பிலான 5 திட்டங்கள் ஒப்பளிக்கப்பட்டு பின்வரும் உட்கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. **(இணைப்பு IV)**

**5.3. நபார்டு வங்கி மூலமான நிதியுதவியில் கடந்த 6 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட சில உட்கட்டமைப்பு மேம்பாடுகள்** (under financial assistance of NABARD)

மாநில அரசானது, பால் கூட்டுறவு தொழிலுக்கு தேவையான உத்வேகத்தை, நபார்டு கிராமப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டு மானிய நிதி உதவி மூலம் வழங்கி உள்ளது. கடந்த

**2014–15, 2015–16** மற்றும் **2016–17** ஆம் ஆண்டுகளில் **ரூ.158.67** கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

**2017–18**ஆம் ஆண்டில் திண்டுக்கல், சிவகங்கை, காஞ்சிபுரம்–திருவள்ளூர்,தஞ்சாவூர் மற்றும் வேலூர் ஆகிய மாவட்ட ஒன்றியங்களுக்கு உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக **ரூ.2101.60** இலட்சம் அனுமதிக்கப் பட்டுள்ளது.

**2018–19**ஆம் ஆண்டில் விற்பனையை மேம்படுத்துவதற்காகவும், சுவையூட்டப்பட்ட பொருட்கள் மற்றும் பால்பண்ணையின் சேமிப்பு வசதிகளை மேம்படுத்துவதற் காகவும் ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியை பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது

## 5.4. தேசிய பால்வளத் திட்டம்–I (2011-12)

கால்நடைகளின் உற்பத்தித்திறனை அதிகரிக்கவும், அதன் வாயிலாக தீவிரமாக வளர்ந்து வரும் பால் தேவையை அடைவதற்கு தேவையான பால் உற்பத்தியை அதிகரிக்கவும், மேலும் அமைப்புசார் பால் பதப்படுத்தும் பிரிவை அதிகஅளவில் கிராமப்புற பால் உற்பத்தியாளர்கள் தொடர்பு கொள்வதற்கு

வழிவகை செய்யும் நோக்கங்களுடன் இந்தியா முழுவதிலும் **2011–12** முதல் தேசிய பால்வளத் திட்டம் (முதற்கட்டம்) நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

### 5.4.1. வம்சாவழி சோதனைத் திட்டம்

தேசிய பால்வளத் திட்டத்தின் கீழ், கலப்பின ஜெர்சி பசுக்களுக்கு வம்சாவழி சோதனைத் திட்டம் ரூ.**39.28** கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம், **2012–13** முதல் வேலூர், விழுப்புரம், ஈரோடு, சேலம் மற்றும் திருச்சி ஆகிய ஐந்து மாவட்ட ஒன்றியங்களில் செயல்படுத்தப்பட்டு, **2018– 19** ம் ஆண்டு முடிவில், அதிக பால் உற்பத்தி மரபுத்திறன் உள்ள **254** பொலி காளைகள் உற்பத்தி செய்யப்படும். கறவைகளின் பால் உற்பத்தித் திறன் அளவுகளான பால் உற்பத்தி அளவு, பாலின் தரம், பால் உற்பத்தி மரபுத் திறன் அடிப்படையின் மூலம், பிறந்த கிடாரி கன்றுகளின் செயல்பாடுகளை கொண்டு காளைகளின் தரம் வரிசைப்படுத்தப்பட்டு, அதிக பால் உற்பத்திக்கான மரபுத் திறன் கொண்ட உறைவிந்து உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.

### 5.4.2. உதகமண்டலம் ஜெர்சி கருவூல பொலிகாளை பண்ணைஉறை விந்து நிலையத்தை மேம்படுத்துதல்

தேசிய பால்வளத்திட்டத்தின் கீழ், உதகமண்டலத்தில் உள்ள ஜெர்சி கருவூல பொலிகாளை பண்ணை உறை விந்து நிலையம் ரூ.1,311.12 இலட்சம் மானிய ஒதுக்கீட்டில் மேம்படுத்தப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின் கீழ், ஆத்தூரில் இளம் காளை கன்றுகளை பராமரிக்கும் கொட்டகையின் சுற்றுச் சுவர் அமைப்பது மட்டுமல்லாமல், ஈரோட்டில் இளம் காளை கன்றுகளை பராமரிக்கும் கொட்டகை (quarantine), புதுக்குடியில் கன்று வளர்ப்பு நிலையம் மற்றும் உதகமண்டலத்தில் உள்ள ஜெர்சி கருவூல பொலிகாளை பண்ணை கட்டுமானப் பணிகளை மேம்படுத்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ள வழிவகை செயய்யப்பட்டுள்ளது. இது தவிர பல்வேறு ஆய்வக கருவிகள், பண்ணைக் கருவிகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப கருவிகள் ஆகியன இத் திட்டத்தின் கீழ் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

### 5.4.3. கிராமிய அளவில் பால் கொள்முதல் திட்டம்

தேசிய பால்வள திட்டம்–Iன் கீழ், கிராமிய அளவில் பால் கொள்முதல் திட்டம், சேலம், கோயம்புத்தூர், ஈரோடு,

வேலூார், திருச்சி மற்றும் காஞ்சிபுரம்–திருவள்ளூர் ஆகிய ஆறு பால் ஒன்றியங்களில் **2014–15** ல் ரூ **2451.82** இலட்சம் திட்ட மதிப்பீட்டில் தொடங்கப்பட்டு, **2018–19** ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ், **45** மொத்த பால் குளிர்விப்பான்கள், **559** தானியங்கி பால் சேகரிக்கும் கருவிகள் மற்றும் **1789** பால் கேன்கள் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது. **2017–18**ஆம் ஆண்டில், சேலம் மற்றும் வேலூர் ஒன்றியங்களுக்கு மொத்த பால் குளிர்விப்பான்கள் நிறுவுவதற்கு மேலும் இரு துணைத்திட்டங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. சங்க பணியாளர்கள், சங்க நிர்வாகக் குழு உறுப்பினர்கள் மற்றும் பால் உற்பத்தியாளர்களுக்கு பயிற்சிகளும் அளிக்கப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தினை செயல்படுத்துவதன் மூலமாக, தூய பால் உற்பத்தியுடன், கறந்த பாலின் தரத்திலும் உயர்வு காணப்படும்.

### 5.4.4. சமச்சீர் கால்நடை தீவன திட்டம் (Ration Balancing Programme)

தேசிய பால்வளத் திட்டம்–I கீழ், சேலம், கோயம்புத்துார், ஈரோடு, விழுப்புரம், வேலுார், திருச்சி, மதுரை, திண்டுக்கல், தருமபுரி, திருநெல்வேலி மற்றும் காஞ்சிபுரம்–திருவள்ளூர் ஆகிய 11 பால் ஒன்றியங்களில், ரூ. 1957.00 லட்சம் நிதி ஒதுக்கீட்டில், 2014–15 ல் சமச்சீர் கால்நடை தீவனத்திட்டம் தொடங்கப்பட்டு 2018–19 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

உள்ளூரில் கிடைக்கும் தீவன பொருட்களைக் கொண்டு, குறைந்த செலவின சூத்திரம் தயாரித்து, கால்நடைத் தீவன செலவை குறைப்பதை இத்திட்டம் இலக்காக கொண்டுள்ளது. இக்குறைந்த செலவின சூத்திரம் 2.0 லட்சம் உறுப்பினர்களை கவரும் வகையில் இதுவரை 1.85 லட்சம் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதனால் கால்நடை தீவன செலவில், லிட்டர் ஒன்றிற்கு ரூ. 1 முதல் ரூ. 3 வரை குறைந்துள்ளதோடு, கறவை மாட்டின் பால் உற்பத்தி 300 முதல் 500 மிலி அதிகரித்துள்ளது.

## 5.5. ஒருங்கிணைந்த பால்பண்ணை மேலாண்மை அமைப்பு (IDMS)

கிராம அளவில் தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் முதல் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் வரையிலான அனைத்து சங்க செயல்பாடுகளையும் தானியங்கி கணினிமயம் மூலம் ஒருங்கிணைத்திட ரூபாய் 46.55 கோடி செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்காக மத்திய அரசு ரூ.18.34 கோடியை மானியமாக ஒப்பளிப்பு செய்துள்ளது. இத்திட்டம் நடைமுறை செயல்திறனில் மேம்பாட்டை ஏற்படுத்துவதுடன் பால் உற்பத்தியாளர்கள், நுகர்வோர் மற்றும் விற்பனையாளர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் குறித்த நேரத்தில் சேவைகளை உறுதி செய்திடவும் உதவுகிறது. இத்திட்டம், செப்டம்பர் 2018ல் முடிவு பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 6. முக்கிய உட்கட்டமைப்பு மற்றும் தொழில்நுட்ப தர உயர்வு திட்டங்கள்

### 6.1. சோழிங்கநல்லூர் பால்பண்ணையில் உயர் வெப்பநிலையில் பால் பதப்படுத்துதல்

சோழிங்கநல்லூர் பால் பண்ணையில் நாளொன்றுக்கு ஒரு இலட்சம் லிட்டர் பாலை பதப்படுத்தி உயர் வெப்ப நிலையில் சிப்பம் கட்டும் திறன் கொண்ட அழுகலற்ற (நோய் நுண்மங்கள் ஒழிக்கப் பெற்ற) சிப்பம் கட்டும் அலகு (Aseptic packing machine) ஒன்று ரூ.35.98 கோடி செலவில் நிறுவும் பணி நடைபெற்று வருகிறது. அறை வெப்பநிலையில் 90 நாட்களுக்கு கெடாமல் சேமித்து வைக்கலாம் என்பதே இத்திட்டத்தின் தனிப்பட்ட சிறப்பம்சமாகும். இத்திட்டம் ஜூலை 2018ல் முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஏற்றுமதி சந்தை மற்றும் நுகர்வோர்களை கவர்ந்து, ஆவின் நிறுவனத்தின் சந்தை பங்களிப்பை மேலும் விரிவாக்கம் செய்வதை இத்திட்டம் முக்கிய நோக்கமாக கொண்டுள்ளது.

## 6.2. வெண்ணெய் மற்றும் பால் பவுடர் சேமிப்பு கிடங்கு வசதிகளை அதிகரித்தல்

சேமிப்பு கிடங்குகளில் கொள்ளளவு தன்னிறைவு பெறுவதற்கும், தடையில்லா விற்பனையை உறுதி செய்யவும், ரூ.4.74 கோடி செலவில் மதுரை, திருவண்ணாமலை, திருச்சி மற்றும் கோயம்புத்தூர் பால்பண்ணைகளில் 1,725 மெட்ரிக் டன் அளவு பால் பவுடரை சேமித்து வைப்பதற்கான, சேமிப்பு கிடங்குகள் மற்றும் திருநெல்வேலி, மதுரை, திருவண்ணாமலை மற்றும் திருச்சி பால் பண்ணைகளில் ரூ.10.51 கோடி செலவில் 1,120 மெ.டன் கொள்ளளவு திறன் கொண்ட வெண்ணெய் சேமிப்பு வசதி பணிகள் கட்டப்பட்டுள்ளன.

## 6.3. நந்தனத்தில் வாடிக்கையாளர் உதவி மையம் மற்றும் நிர்வாக அலுவலக கட்டிடம்

நந்தனத்தில் வாடிக்கையாளர் உதவி மையம் மற்றும் நிர்வாக அலுவலகக் கட்டிடத்திற்கு மாண்புமிகு அம்மா அவர்களால் 15.07.2015 அன்று அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. 1,13,000 சதுரஅடி மொத்த பரப்பளவும், ஒன்பது மாடிகள் கொண்டதாகவும் உள்ள இக்கட்டிடத்தின் கட்டுமான பணிகள், தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகத்திடம்

ஒப்படைக்கப்பட்டுள்ளது. பணிகள் அனைத்தும் ஜுலை 2018–க்குள் முடிவுறும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

## 6.4. அதி நவீன பாலகங்கள்

ஆவின் நிறுவன மீதான பார்வையை அதிகரிக்கும் பொருட்டும் ஆவின் வணிக சின்னத்தை விளம்பரப்படுத்தும் நோக்குடனும் குழந்தைகள் விளையாடும் இடம், வாகனங்கள் நிறுத்துமிடம் மற்றும் குளிர்பதன வசதியுடன் இருக்கை அறை ஆகியன அடங்கிய அதி நவீன பாலகங்கள் சென்னை மாநகர் மற்றும் மாவட்ட தலைநகரங்களில் உருவாக்கப்பட்டுள்ளன.

சென்னை மாநகரில் ரூ.10 கோடி மதிப்பில் 16 அதி நவீன பாலகங்களும் மாவட்டங்களில் ரூ.11.63 கோடி மதிப்பில் 31 அதிநவீன பாலகங்களும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

## 6.5. பால் பண்ணைகளில் மரபு சாரா எரிசக்தி பயன்பாடு

பசுமை பால்பண்ணை முறைகளை செயல்படுத்த, பால் பண்ணை செயல்பாடுகளில் மரபு சாரா எரிசக்தி உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கிடவும் ஆவின் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இந்த வகையில் 8 பால் பண்ணைகள், 4 குளிரூட்டும் நிலையங்கள் மற்றும் 100 மொத்த

பால் குளிர்விப்பான்கள் ஆகியவற்றில் சூரிய ஒளி மூலம் 80°செல்சியஸ் வெப்பத்தில் 1.11 இலட்சம் லிட்டர் சுடுநீர் தயாரிக்கும் திறன் கொண்ட வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், பகல் நேரத்தில் சூரிய வெப்பத்தை கொண்டு பால்பண்ணையை இயக்குவதற்கு மதுரை பால்பண்ணையில் ஒரு புது திட்டம் தற்போது நடைபெற்று வருகிறது. இத்திட்டம் ஜுலை 2018க்குள் நிறைவு பெறும் என எதிர்பார்க்கப் படுகிறது.

## 6.6. மதுரை பால்பண்ணை வளாகத்தில் ஐஸ் கீரிம் தயாரிக்கும் தொழிற்சாலை

மதுரை பால்பண்ணை வளாகத்தில் நாளொன்றுக்கு 20,000 லிட்டர் ஐஸ்கீரிம் தயாரிக்கும் தொழிற்சாலை ரூ.40 கோடி திட்ட மதிப்பீட்டில் நிறுவப்பட்டு வருகிறது. இத்தொழிற்சாலையை நாளொன்றுக்கு 30,000 லிட்டர் அளவிற்கு விரிவாக்கம் செய்ய இயலும். இத் தொழிற் சாலையின் கட்டடம் கட்டுதல் மற்றும் உட்கட்டமைப்பு பணிகள் முழுமையாக ஒப்படைக்கும் வகையில் ஆனந்தில் உள்ள தேசிய பால்வள வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் டிசம்பர் 2018ல் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 6.7. மதுரை பால்பண்ணையில் உயர் வெப்பநிலையில் நறுமண பால் பதப்படுத்துதல்

மதுரை மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தில் ரூ.40 கோடி மதிப்பில் உயர் வெப்ப நிலையில் நறுமண பால் பதப்படுத்தும் பிரிவு ஒன்று கட்டப்பட்டு வருகிறது. இப்பிரிவு நாளொன்றுக்கு 25,000 லிட்டர் நறுமண பாலை உயர் வெப்ப நிலையில் பதப்படுத்தி சிப்பம் கட்டும் திறன் கொண்டதாகும். இவ்வாறு தயாரிக்கும் நறுமண பால் 90 நாட்கள் வரை கெடாமல் இருக்கும். இத்திட்ட பணிகள் ஜனவரி 2019ல் முடிவடையும் என எதிபார்க்கப்படுகிறது.

## 7. பால் உற்பத்தியாளர்களுக்கு கூட்டுறவு சங்கங்களால் அளிக்கப்படும் சிறப்பு சேவைகள்

பால் உற்பத்தியாளர்களின் நலன்காப்பது பால் கூட்டுறவு சங்கங்களின் முக்கியமான நோக்கமாகும். மேற்படி நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் பால் உற்பத்தியாளர்களுக்கு கீழ்க்கண்ட சேவைகளை வழங்கி வருகிறது.

## 7.1. பால் உற்பத்தியாளர்களுக்கு அளிக்கப்படும் சிறப்பு சேவைகள்

நோய்வாய்ப்பட்டுள்ள கால்நடைகளுக்கு மருத்துவ சிகிச்சை அளிப்பதற்கு பால் உற்பத்தியாளர்களின் இருப்பிடத்திற்கே சென்று கால்நடை மருத்துவ சிகிச்சை சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன. அவசரகால மருத்துவ சிகிச்சையும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆண்டிற்கு ஒரு கன்றினை பெறும் வகையில் உரிய காலத்தில் செயற்கைமுறை கருவூட்டல் செய்வது அவசியமாகும். எனவே பால் உற்பத்தியாளர்களின் நலன் கருதி கால்நடை மருத்துவ சேவைகளை மேலும் வலுப்படுத்தும் வண்ணம், கால்நடை மருத்துவர்கள் மற்றும் பயிற்சி பெற்ற செயற்கை கருவூட்டல் பயிற்சியாளர்கள் மூலம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க உறுப்பினர்களின் கறவை மாடுகளுக்கு அவர்கள் இருப்பிடத்திற்கே சென்று செயற்கைமுறை கருவூட்டல் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. 2017–18 ஆம் ஆண்டில் மொத்தம் 20.34 இலட்சம் செயற்கை கருவூட்டல்கள் செய்யப் பட்டுள்ளன. குறிப்பிட்ட கால இடைவெளிகளில் கிராமங்களில் குடற்புழு நீக்கம் மற்றும் மலட்டுத்தன்மை அகற்றும் முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

கால்நடை தீவன பயன்பாட்டை ஊக்குவிப்பதற்காக உற்பத்தியாளர்களுக்கு கால்நடைத் தீவன விலையில் கிலோ ஒன்றுக்கு ரூ.2/– முதல் ரூ.4/–வரை மானியமாக வழங்கப்பட்டு வருகிறது. அதுபோல தாது உப்புக்கலவையும் கிலோ ஒன்றுக்கு ரூ.15/– முதல் ரூ.25/– வரை மானிய விலையில் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. மானிய விலையில் கால்நடை காப்பீட்டு திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தஞ்சாவூர், புதுக்குடி பண்ணையில் ஒன்றியத்திற்கு சொந்தமான நிலப்பரப்பில் பசுந்தாள் தீவன சாகுபடி செய்யப்பட்டு பால் உற்பத்தியாளர்களுக்கு பசுந்தீவனம் மற்றும் புல் விதைக் கரணைகள் வழங்கப்படுகின்றன.

தேசிய கால்நடைத் திட்டத்தின்கீழ், தாலுக்கா அளவில் 300 தாலுக்காக்களை உள்ளடக்கிய 15000 பால் உற்பத்தியாளர்களுக்கு தூய பால் உற்பத்தி பழக்கங்கள், புல்வெட்டிகள் பயன்படுத்தி அறிவியல் முறையில் கால்நடை தீவனம், சைலேஜ் தயாரித்தல், அசோலா சாகுபடி ஆகியவற்றுடன் பசுந்தாள் தீவன மேம்பாட்டுப்பயிற்சி அளித்தல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**7.2. மானிய விலையில் கால்நடைத் தீவனம் மற்றும் தாது உப்புக்கலவை வழங்குதல்**

மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் தங்களது சொந்த நிதியிலிருந்து முறையே கால்நடைத் தீவனத்திற்கு கிலோ ரூ.2/– முதல் ரூ.4/– வரை மானியமாகவும், தாது உப்புக் கலவைக்கு கிலோ ரூ.15/– முதல் ரூ.25/– வரை மானியமாகவும் வழங்கி வருகின்றன.

2017–18 ஆம் ஆண்டில் 76,205 மெட்ரிக்டன் கால்நடை தீவனம் மானிய விலையில் வழங்க ரூ.17.80 கோடியும், 391 மெட்ரிக் டன் தாது உப்பு கலவை வழங்க ரூ.94.88 இலட்சமும் செலவிடப்பட்டுள்ளது.

**7.3. பசுந்தாள்தீவன சாகுபடி**

மாவட்ட ஒன்றியங்கள் மற்றும் புதுக்குடி (தஞ்சாவூர்) ஆகிய இடங்களில் தற்போது 67.81 ஏக்கர் நிலப்பரப்பில் பசுந்தாள் தீவனம் சாகுபடி செய்யப்படுகிறது.

2017–18ம் ஆண்டில் இணையத்தின் உதகமண்டலம் பொலிகாளைபண்ணை மற்றும் புதுக்குடி மற்றும் அருகாமையில் உள்ள திருச்சி, தஞ்சாவூர், புதுக்கோட்டை மற்றும் சிவகங்கை மாவட்ட ஒன்றியங்களை சார்ந்த

கால்நடைகளுக்கான பசுந்தாள் தீவன தேவையை எதிர்கொள்ள தஞ்சாவூர் புதுக்குடியில் 20 ஏக்கர் நிலப்பரப்பில் பசுந்தாள் தீவனம் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

மேலும் 2018–19 ஆம் ஆண்டில் பசுந்தாள் தீவன தேவையை எதிர்கொள்ள ஏதுவாக சங்கங்கள் / ஒன்றியங்கள் / இணையத்திற்கு சொந்தமான நிலப்பரப்புகளை பசுந்தாள் தீவன சாகுபடிக்கு பயன்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

## 7.4. திருத்தியமைக்கப்பட்ட பேரறிஞர் அண்ணா பால் உற்பத்தியாளர்கள் நலநிதி

பால் உற்பத்தியாளர்களின் விசுவாசத்தை அதிகரிக்கும் பொருட்டும், பால் உற்பத்தியாளர்கள் இடர்பாடுகளை சந்திக்கும் நேரங்களில் அவர்களுக்கு உதவிடும் வகையிலும் திருத்தி அமைக்கப்பட்ட பேரறிஞர் அண்ணா பால் உற்பத்தியாளர்கள் நலநிதி உருவாக்கப்பட்டது. இந்நலநிதிக்கு பால் உற்பத்தியாளர் உறுப்பினர் ஒருவர், தனது பால்பண பட்டுவாடா தொகையிலிருந்து மாதம் ஒன்றுக்கு ரூ.1/– சந்தாவாக செலுத்தும் போது, சம்பந்தப்பட்ட மாவட்ட ஒன்றியம் மற்றும் சங்கம் அந்த உறுப்பினருக்கு மாதந்தோறும் தலா ரூ 1 ஐ தங்களது பங்களிப்பாக இந்நிதியில் செலுத்தும்.

இந்நலநிதியிலிருந்து முழுமையான நிதி உதவி பெற, விபத்து ஏற்பட்ட நாளுக்கு முந்திய நாளிலிருந்து ஓராண்டு காலத்திற்குள், பால் ஊற்றும் உறுப்பினர் 120 லிட்டர் பால், 180 நாட்களுக்குள் வழங்கியிருக்க வேண்டும்.

இத்திட்டம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 15.07.2015 அன்று துவக்கி வைக்கப்பட்டது. இதுவரை 82 பால் உற்பத்தியாளர்களுக்கு ரூ. 1.44 கோடி வழங்கப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண்.306 கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் (பா.உ 1) துறை, நாள் 20.11.2013ன்படி, பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க உற்பத்தியாளர் உறுப்பினர்களுக்கு உயர்த்தி வழங்கப்படும் உதவித் தொகை விபத்தின் காரணமாக மரணமடையும் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட உடல் உறுப்புகளை இழக்கும் பால் உற்பத்தியாளருக்கு ரூ.1.75 இலட்சமும், விபத்தில் ஏதாவது ஒரு உடல் உறுப்பு இழந்தால் ரூ.75,000/–ம் உயர்த்தி வழங்கப்படுகிறது. வாரிசுதாரர்களுக்கு கல்வி/ திருமண உதவித் தொகையாக ரூ.10,000/– நிதி உதவி வழங்கப் படுகிறது. ஆனால் சங்கம், ஒன்றியம் மற்றும் பயனாளிகள் செலுத்தும் சந்தா தொகையில் மாற்றம் ஏதும் இல்லை.

## 7.5. பால் உற்பத்தியாளர்களுக்கு கூட்டுறவு ஒன்றியங்களால் வழங்கப்படும் ஊக்கத்தொகை

மாவட்ட ஒன்றியங்கள் பால் உற்பத்தியாளர்களுக்கு ஊக்கத் தொகை வழங்குவதன் மூலம், தங்களது செலவினத்திற்கு மேல் ஈட்டும் உபரி வருமானத்தை பகிர்ந்து கொள்கின்றன. குறிப்பிட்ட மாவட்ட ஒன்றியம் ஈட்டும் உபரி வருமானத்தை பொறுத்து, இந்த ஊக்கத்தொகை பொதுவாக, லிட்டர் ஒன்றுக்கு 60 பைசாவிலிருந்து ரூ.1.60 வரை வழங்கப்படுகிறது. 2011–17ம் ஆண்டில் 3,48,019 பால் உற்பத்தியாளர்களுக்கு ரூ.162.79 கோடி ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. (இணைப்பு–VI)

## 7.6. பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களின்பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்படும் போனஸ்

சங்கம் இலாபம் ஈட்டும் காலத்தில், பால் உற்பத்தியாளர் உறுப்பினர்களுக்கு, பங்கு மூலதனத்தில், ஈவுத்தொகையாகவும், ஆதரவு தள்ளுபடி தொகையாகவும் (patronage rebate) மற்றும் இலாபத்தில் 50% தொகை போனஸாகவும், அவர்கள் சங்கத்திற்கு வழங்கிய பாலின் மதிப்பிற்கேற்ப, வழங்கப்படுகிறது.

கடந்த 2017–18ல் 2.85 இலட்சம் உறுப்பினர்கள் பயன்பெறும் வகையில் ரூ. 131.50 கோடி போனஸ், ஈவுத்தொகை மற்றும் ஆதரவு தள்ளுபடி தொகை ஆகியவை வழங்கப்பட்டுள்ளது.

## 7.7. மொத்த பால் குளிர்விப்பான்கள் நிறுவுதல் (BMC)

கிராம அளவில், பாலின் ஆரம்ப தரத்தை நிலைப்படுத்தவும், பால் குளிரூட்டும் நிலையங்கள்/ பால்பண்ணைகளுக்கு பாலை கேன்கள் மூலமாக கொண்டு செல்வதை தவிர்க்கவும், காப்புத்திறனை நீட்டிப்பதை நோக்கமாக கொண்டு மொத்த பால் குளிர்விப்பான்கள் அமைக்கப்படுகின்றன. இதுவரை 15.19 இலட்சம் குளிரூட்டும் திறனுடன் 341 மொத்த பால் குளிர்விப்பான்கள் நிறுவப்பட்டுள்ளன. (எதிர் வரும் 5 ஆண்டுகளில், நாளொன்றுக்கு 500 லிட்டர் பால் கொள்முதல் செய்யும் அனைத்து பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களிலும் 500 / 1000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மொத்த பால் குளிர்விப்பான்கள் நிறுவ தொலைநோக்கு திட்டமிடப்பட்டுள்ளது) தேசிய வேளாண் வளர்ச்சி திட்டம் மற்றும் கிராம அளவில் பால் பெருக்குத்திட்டம் ஆகியவற்றின் கீழ் மொத்தம் 218 மொத்த பால் குளிர்விப்பான்கள் நிறுவுவதன்

மூலம் தற்போதைய குளிரூட்டும் திறனான நாளொன்றுக்கு **15.19** இலட்சம் லிட்டர் என்ற அளவிலிருந்து நாளொன்றுக்கு **19.12** இலட்சம் லிட்டர் என்ற அளவிற்கு உயர்த்திட திட்டமிடப்பட்டுள்ளது.

## 8. பால் மற்றும் பால் பொருட்கள் விற்பனை

### 8.1. உள்நாட்டு விற்பனை

1. தமிழ்நாட்டில் நுகர்வோருக்கு தூய்மையான சுகாதாரமான முறையில் தயாரிக்கப்பட்ட பால் மற்றும் பால் பொருட்களை அளிப்பதில் ஆவின் தன்னை அர்ப்பணித்து வருகிறது

2. நுகர்வோருக்கு வெகு நியாயமான விலையில் பால் மற்றும் பால் பொருட்களை அளிப்பதிலும், சந்தையில் பால் மற்றும் பால் பொருட்களின் விலையை கட்டுப்படுத்துவதிலும், ஆவின் தளராது பாடுபடுகிறது.

3. தற்போதைய விற்பனை சந்தையில் ஆவின் பால் மற்றும் பால் பொருட்கள் விற்பனையின் பங்கினை அதிகப்படுத்தியும் நிலைநிறுத்தவும் ஆவின் நோக்கமாக கொண்டுள்ளது.

4. தமிழ்நாட்டில் பால் மற்றும் பால் பொருட்கள் சில்லரை விற்பனை அடித்தளத்தை மேம்படுத்துவதற்கும், ஆவின் பால் மற்றும் பால் பொருட்கள் கிடைப்பதை உறுதி செய்யவும் ஆவின் தீவிர விற்பனை முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. கொள்கை முடிவாக அதிக எண்ணிக்கையிலான சில்லரை விற்பனையாளர்கள் தொடர்ந்து நியமிக்கப்படுவர்.

5. அனைத்து வயது தரப்பினரையும் குறிப்பாக இளைய தலைமுறையினரை கவரும் வகையில் செய்தி ஊடகங்கள், மின்னணு ஊடகங்கள் மற்றும் சமூக வலைதளங்கள் பயன்பாடு மூலம் விளம்பரம் செய்வதற்கு உரிய விளம்பர கொள்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

6. நுகர்வோரின் தனிப்பட்ட தேவையை அறிந்து செயல்படவும் ஆவின் தனது அனைத்து வகையான பால் பொருட்களை அறிமுகப் படுத்துவதற்கும், சந்தை ஆய்வு மேற்கொள்ள திட்டமிட்டுள்ளது

7. வாடிக்கையாளரது சேவையை மேம்படுத்த அனைத்து விற்பனை பிரிவு பணியாளர்கள் மற்றும்

அலுவலர்களுக்கு வாடிக்கையாளர் நடத்தை இனங்களில் உரிய பயிற்சி வழங்கப்படும்

8. ஆவின் பொருட்கள் பற்றி அறிந்து கொள்ள ஏதுவாக, பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களை பால்பண்ணைகளை தொடர்ந்து பார்வையிட அனுமதிக்கப்படும்.

9. ஆவின் பால் மற்றும் பால்பொருட்களை நல்லமுறையில் விளம்பரப்படுத்துவதற்காக, கருத்து மற்றும் விளம்பர வடிவமைப்புகளை பரிந்துரைத்திட தொழில் முறையிலான விளம்பர ஆலோசகர்கள் நியமிக்கப் பட்டுள்ளனர்.

## 8.2. சென்னை பெருநகரில் பால் விற்பனை

சென்னை பெருநகரம் மற்றும் புறநகர் பகுதிகளில், ஆவின் பால் விற்பனையை, இணையம் மேற்கொண்டு வருகிறது. சென்னை பெருநகரில் ஆவின் நிறுவன பொருட்களே அதிக அளவில் விற்பனை ஆகின்றன. சராசரியாக நாளொன்றுக்கு **11.91** இலட்சம் லிட்டர் பால் சென்னை பெருநகரில் விற்பனை செய்யப்படுகிறது.

**சென்னை பெருநகர விற்பனை:** (நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில்)

| வ. எண் | விவரம் | 2016-17 | 2017-18 | வளர்ச்சி விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | பெருநகர பால் விற்பனை | 11.39 | 11.91 | 4.50 |

2018–19ம் ஆண்டில் பால் விற்பனையை நாளொன்றுக்கு 12.75 இலட்சம் லிட்டர் என்ற அளவிற்கு உயர்த்த ஆவின் திட்டமிட்டுள்ளது.

## அட்டவணை 8
## பால் விற்பனை விலை

| வ. எண் | பாலின் வகை | பால் பை நிறம் | விவரம் | | 500 மில்லி லிட்டருக்கான விலை (ரூபாயில்) | |
|---|---|---|---|---|---|---|
| | | | கொழுப்பு சத்து % | கொழுப்பு அல்லாத இதர சத்து % | அட்டை தாரர் களுக்கு | அதிகபட்ச சில்லரை விற்பனை விலை |
| 1 | இருநிலை சமன் படுத்திய பால் | மெஜந்தா | 1.5 | 9.0 | 16.50 | 17.00 |
| 2 | சமன்படுத்திய பால் | நீலம் | 3.0 | 8.5 | 17.00 | 18.50 |
| 3 | நிலைப்படுத்திய பால் | பச்சை | 4.5 | 8.5 | 19.50 | 20.50 |
| 4 | கொழுப்புச்சத்து நிறைந்த பால் | ஆரஞ்சு | 6.0 | 9.0 | 21.50 | 22.50 |

## 8.3. விற்பனை உட்கட்டமைப்பு

ஆவினின் பல்வேறு வகையான பொருட்கள், சென்னை பெருநகரம் மற்றும் அதன் புறநகர் பகுதி நுகர்வோர்களிடையே மிகவும் பிரபலமடைந்துள்ளன. பால் மற்றும் பால் பொருட்கள், அதிக அளவில் நுகர்வோர்களை சென்றடைவதை உறுதி செய்யும் வகையில், இணையம், சிறந்ததொரு பின்னல் வலை அமைப்பைக் கொண்டுள்ளது.

**அட்டவணை 9**

**விற்பனை உட்கட்டமைப்பு வசதிகள்**

| வ. எண் | உட்கட்டமைப்பு விவரம் | 2013–14 | 2014–15 | 2015–16 | 2016–17 | 2017–18 |
|---|---|---|---|---|---|---|
| 1 | விநியோக வழித்தடங்கள் | 113 | 117 | 119 | 132 | 148 |
| 2 | வட்டார அலுவலகங்கள் | 16 | 16 | 16 | 16 | 27 |
| 3 | பால் வழங்கும் நிலையங்கள் | 470 | 470 | 433 | 437 | 441 |
| 4 | விநியோகிக்கும் இடங்கள் | 311 | 311 | 361 | 376 | 485 |
| 5 | பாலகங்கள் | 93 | 93 | 114 | 147 | 147 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 6 | மொத்த பால் விநியோகிப்பாளர்கள் | 47 | 71 | 71 | 83 | 84 |
| 7 | பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள் | 49 | 49 | 49 | 49 | 49 |
| 8 | ஆவின் உரிமம் பெற்ற சில்லறை விற்பனையாளர்கள் | 184 | 202 | 451 | 556 | 556 |
| 9 | பால் பொருட்கள் விநியோக வழித்தடங்கள் | 14 | 16 | 25 | 33 | 33 |

## 8.4._ பால் பொருட்கள் விற்பனை

மக்கள் அதிக அளவில் கூடும் இடங்களில் உள்ள விற்பனையகங்களில் பொருட்கள் கிடைப்பதை உறுதி செய்வதிலேயே தான் சந்தை வெற்றி சாத்தியமாகிறது. தற்போது மால்ஸ், ஹைபர் மார்க்கெட்டுகள், சூப்பர் மார்க்கெட்டுகள் மற்றும் இதர பல்வகை அங்காடிகள்போன்றவற்றில் மக்கள் நடவடிக்கை அதிகமாக உள்ளதென தெரிய வருவதால் தான் அங்கு விற்பனை அதிகமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இக்கோட்பாட்டை நன்கு உணர்ந்தே பிக்பஜார், ரிலையன்ஸ் பிரெஷ், ரிலையன்ஸ் மெட்ரோ போன்ற வணிக வளாகங்களில் இணையத்தின் மூலம் நேரடியாகவும் டி மார்ட், ஸ்பார் ஹைறபர்மார்க்கெட், கிரேஸ் சூப்பர் மார்க்கெட் தொடர் அங்காடிகள், மார்ஜின் பிரி

சூப்பர் மார்க்கெட் ஆகியவற்றில் மொத்த விற்பனையாளர்கள் மூலமும் ஆவின் பொருட்கள் கிடைப்பதை உறுதி செய்கிறது. மேற்படி வணிகவளாகங்களில் ஆவின் பொருட்களை மேலும் விற்பனை செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வாடிக்கையாளர்கள், கூடுதல் செலவில்லா முறையில் பொருட்களை இல்லந்தேடி வருவதையே விரும்புகின்றனர். இதனை கருத்தில் கொண்டே தற்போது இணையதள வழியிலான விற்பனை நிறுவனங்கள் அதிக அளவில் இல்லந்தோறும் பொருட்களை எடுத்துச் செல்கின்றன. மேலும் சில நிறுவனங்கள் சென்னை மாநகரில் தங்களது இயக்கத்தை ஆரம்பிக்க திட்டமிட்டு வருகின்றன. இந்நிறுவனங்கள் மிகுதியான பொருட்களை இல்லந்தோறும் எடுத்துச் செல்வதால், இந்நிறுவனங்களின் சேவைகளை பயன்படுத்துவதன் மூலம் ஆவின் சென்னை மாநகரின் மேலும் பல வாடிக்கையாளர்களை அடைவதற்கு உதவிடும். இதன் முக்கியத்துவத்தை கணக்கில் கொண்டு பிக் பாஸ்கெட் மற்றும் கிராபெர் போன்ற இல்லந்தோறும் எடுத்துச் செல்லும் நவீன நிறுவனங்களுடன் ஆவின் பொருட்களையும் வாடிக்கையாளர் இல்லத்திற்கே எடுத்துச் செல்ல உடன்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தற்போது பிளிப்கார்ட்

நிறுவனத்துடன் உடன்படிக்கை மேற்கொள்ளும் முயற்சி நடவடிக்கையில் உள்ளது.

சென்னை மாநகர் மற்றும் அதன் புறநகர் பகுதியில் விற்பனையை அதிகரிப்பதற்காக, அனைத்து சூப்பர் மார்க்கெட், பல்நோக்கு அங்காடிகள், நிலையான மளிகை கடைகள், கல்வி நிறுவனங்கள், சமையல் நிறுவனங்கள் போன்ற இடங்களில் ஐஸ்கிரிம் மற்றும் நொதித்தல் பால் பொருட்களை விற்பனை செய்வதற்காக சூப்பர் ஸ்டாக்கிஸ்ட்களை நியமனம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

விற்பனை பிரிவு மண்டல பணியாளர்களது தீவிர களப்பணி வாயிலாக சென்னை மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் FROகளின் எண்ணிக்கையை அதிகரிக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது. இச் சில்லரை விற்பனையாளர்கள் வங்கிகள் மூலமான உற்பத்தி மூலதன நிதியுதவி ஏற்படுத்துவதன் மூலம் ஊக்குவிக்கப்படுவர்,

மக்கள் கூட்டம் நெருக்கடியாக உள்ள இடங்களில் நடமாடும் பாலகங்கள் அறிமுகப்படுத்துவதன் மூலமும் தள்ளு கைவண்டி விற்பனையை ஏற்படுத்துவதன் மூலமும் பால்

பொருட்கள் விற்பனையை அதிகரிக்க முடிவெடுக்கப் பட்டுள்ளது

சென்னை மாநகரில் பிரத்யோக ஆவின் ஐஸ்கிரிம் விற்பனை நிலையங்களை துவக்கவும், பள்ளிகள், கல்லூரிகள் போன்ற இடங்களில் அதிக அளவில் ஆவின் விற்பனையகங்களை துவக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது

ஆவின் பொருட்கள் விற்பனை தொடர்பான சந்தேகங்கள் பெறவும், மொத்த விற்பனை ஆணைகள் பெறவும் பிரத்யேகமானதொரு ஆவின் மின்வணிக நடைமேடை அறிமுகப்படுத்தவும் திட்டமிடப் பட்டுள்ளது. வாடிக்கையாளர்கள் தங்கள் இல்லத்திற்கே ஆவின் பொருட்களை எடுத்துச் செல்ல தேவையான கொள்முதல் ஆணைகளை வழங்க இணைய ஆன்லைன் நடைமேடையை பயன்படுத்திடலாம்.

## 8.5. மேலை நாடுகளில் பால் பொருட்கள் விற்பனை

இந்திய நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் நெய், வெண்ணெய் மற்றும் கொழுப்பு நீக்கப்பட்ட பால் பவுடர் ஆகியன பெருமளவில் நுகரப்படுவதை சுட்டிக்காட்டப்பட வேண்டியுள்ளது. **2007–08** வரை நாடு முழுவதும் இணையம்

தனது கிளைகளை இயக்கி வந்தது. எனினும் பல ஆண்டுகளாக நாடு முழுவதும் நிலவி வந்த தொடர் பால் குறைவு காரணமாக மேற்காண் அனைத்து செயல்பாடுகளும் 2008 முதல் நிறுத்தப்பட்டன. தற்போது பால் வரத்து அதிகமாக உள்ளதால், தினசரி வெளியாகும் அதிக அளவிலான பால் பொருட்களை அவ்வப்போது விற்பனை செய்ய நாடு முழுவதும் நமது இருப்பினை நிலைநிறுத்தவது மிகவும் முக்கியமானதாக உள்ளது. எனவே ஒவ்வொரு மாநிலத்திற்கும் என மொத்த விற்பனையாளர்கள் நியமிக்கப்பட்டு வருகின்றனர்.

ராஜஸ்தான், டெல்லி, வட கிழக்கு மாநிலங்கள் (அஸ்ஸாம், அருணாசல பிரதேசம், மணிப்பூர், மிஸோரம், சிக்கிம், நாகலாந்து, திரிபுரா, மேகலாயா) பீகார், மத்திய பிரதேசம், குஜராத், உத்திரகாண்ட், உறரியாணா, அந்தமான் நிகோபார், ஒடிசா, உத்திர பிரதேசம், தெலுங்கானா, ஆந்திர பிரதேசம், மேற்கு வங்காளம் ஆகிய பல்வேறு மாநிலங்களில் மொத்த விற்பனையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இதர அனைத்து மாநிலங்களிலும் மொத்த விற்பனையாளர்களை நியமிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதுவரை 3 மாநிலங்களில் பால் பொருட்கள் விற்பனை துவக்கப்பட்டுள்ளது.

மொத்த விற்பனையாளர்களுக்கு மாதந்தோறும் குறியீடுகள் நிர்ணயிக்கப்பட்டு அவர்களது செயல்பாடுகள் திறனாய்வு செய்யப்படுகின்றன.

கொல்கத்தா பகுதியில் சமீப காலத்தில் கொழுப்பு நீக்கப்பட்ட பால் பவுடர் நுகர்வோர் பாக்கெட்டுகள் (ஒரு கிலோ பாக்கெட்டுகள்) விற்பனை துவக்கப்பட்டு, ஊக்கிவிக்கப்பட்டு வருகிறது. மேற்காண் விற்பனை விரைவில் இதர மாநிலங்களிலும் துவக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் மூலம் வருங்காலங்களில் கொழுப்பு நீக்கப்பட்ட பால் பவுடர் விற்பனைக்கு ஒரு குறிப்பிடத்தக்க நிலையான சந்தை உருவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கிழக்கிந்திய சந்தைகளில் டெய்ரி ஒய்ட்னர் (Dairy Whitener), கொழுப்பு நீக்கப்படாத முழுமையான பால் பவுடர் ஆகியவற்றிற்கு போதிய வரவேற்பு உள்ளதை கருத்தில் கொண்டு மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களை தயாரிப்பதற்கும் மேற்காண் மாநிலங்களில் அவற்றை சந்தைபடுத்துவதற்கும் இவை தயாரிக்கப் படுகின்றன.

UHT பால் மற்றும் பாலை பிளக்ஸி பாக்கெட்டுகளில் உரிய சந்தைகளில் விற்பனை செய்வதற்கு திட்டமிடப்பட்டு வருகிறது.

கொழுப்பு நீக்கப்பட்ட பால் பவுடர், வெண்ணெய், நெய் மற்றும் UHT பால் ஆகியவற்றின் ஏற்றுமதி தற்போது நடைமுறையில் உள்ளது.

## 8.6. ஆவின்பால்பொருட்கள் ஏற்றுமதி செய்தல்

மாண்புமிகு பால் மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்களால், **25.11.2017** அன்று ஒரு லிட்டர் ஆவின் UHT பால், சிங்கப்பூரில் துவக்கி வைக்கப்பட்டதன் மூலம் ஆவின் தனது பால் பொருட்கள் ஏற்றுமதியை ஆரம்பித்துள்ளது. மேலும் பல்வேறு நாடுகளில் இந்த ஆண்டில் ஆவின் பால் பொருட்கள் விற்பனை செய்வதை உறுதி செய்ய ஆவின் நிறுவனத்தால் அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. உயர்மட்ட குழுக்கள் பல்வேறு அயல்நாடுகளுக்கு சென்று வருவதன் மூலமும், பால்பண்ணை மற்றும் இதர உணவு பதப்படுத்தும் கண்காட்சிகளில் பங்கு கொள்வதன் மூலமும், பொருட்காட்சிகளில் ஆவின் கடைகள் அமைப்பது

மூலமாகவும், பால்பொருட்கள் தொடர்பான துண்டுப் பிரசுரங்கள் மற்றும் நுகர்வோர்/ இறக்குமதியாளர் கூட்டங்களை நடத்தியும் பல்வேறு நாடுகளில் காணப்படும் ஆவின் பால்பொருட்கள் சந்தை தேவை கணக்கிடப்படும். எந்தெந்த அயல்நாடுகளில் சந்தை தேவை உள்ளது என்பதறிந்து ஏற்றுமதி நடவடிக்கைகள் துவக்கப்படும். பால்பொருட்கள் தரத்திலும், சிப்பங்கட்டும் முறையிலும் சர்வதேச தரங்களுக்கு நிகராக இருப்பதை உறுதி செய்யப்படும். ஏற்றுமதி நடவடிக்கைக்கென்றே பிரத்யேக விற்பனை பிரிவு ஒன்று இணையத்தில் உருவாக்கப்படும். இந்நடவடிக்கைகள் யாவும், சர்வதேச சந்தையில் ஆவின் வணிக முத்திரைக்கு இடம் உருவாக்குவதோடு பல்வேறு அயல் நாடுகளில் ஆவின் தனது பால்பொருட்களை சந்தைப்படுத்துவதற்கு உதவியாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### 8.7. எதிர்கால விற்பனை உத்திகள்

1. தற்போதைய சந்தை நிலைபாட்டையும் உடனடியாக விற்பனையை அதிகரிக்க தேவையான உத்திகளை

பரிந்துரைக்கவும், விற்பனை செயல் அலுவலர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்படுவர்.

2. சந்தையை முழுமையாக சென்றடையவும் விற்பனையை அதிகரிக்கவும் புது விற்பனை முகவர்கள் / சில்லரை விற்பனை நிலையங்கள் நியமித்தல்

3. வணிக முத்திரையின் விசுவாசத்தை மேம்படுத்தவும் விற்பனையை அதிகரிக்கவும் விளம்பரம் மற்றும் விற்பனை மேம்பாட்டு நடவடிக்கைகள் முடுக்கி விடப்படும்.

4. இளைஞர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தவும் விற்பனையை அதிகரிக்கவும் கல்வி நிறுவனங்களில் புதிய ஆவின் பாலகங்கள் நிறுவப்பட்டு வருகின்றன.

5. சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் உள்ள சூப்பர் மார்க்கெட், பல்பொருள் அங்காடி, கல்வி நிலையங்கள், சமையல்கலைஞர்கள் ஆகியோரது ஆவின் பால் மற்றும் பால் பொருட்களுக்கான தேவையை எதிர்கொள்ளவும் சூப்பர் ஸ்டாக்கிஸ்ட் நியமனம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

6. சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் FRO நியமனங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும்.

7. மக்கள் அதிகமாக கூடும் இடங்களில் விற்பனையை அதிகரிக்க நடமாடும் பாலகங்கள் மற்றும் தள்ளு வண்டிகள் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்

8. இணையதள வழி, பால் நுகர்வோரின் வீட்டிற்கே ஆவின் பால் பொருட்கள் சென்றடையும் வகையில் Big Basket, Grofer போன்ற பெரிய நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுவதற்கான திட்டங்கள் மேற்கொள்ளப்படுகிறது.

9. இணையம் நேரடியாக பிக் பசார், ரிலையன்ஸ் பிரெஷ், ரிலையன்ஸ் மெட்ரோ போன்ற சூப்பர் மார்க்கெட்டுகளில் விற்பனை மேற்கொள்ளுதல்

10. ஒவ்வொரு மாநிலத்திலும் மொத்த விற்பனையாளர்களை நியமித்தல்

11. கொல்கத்தாவில் பால் பவுடர் விற்பனை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளுதல்

12. கிழக்கிந்திய சந்தையில் கொழுப்பு நிறைந்த பால் பவுடர் மற்றும் டெய்ரி ஒயிட்னர் (Dairy Whitener) ஆகியவற்றை விநியோகித்தல்

## 8.8. நுகர்வோர் சேவை மற்றும் ஆதரவு மையம்

கட்டணமில்லா தொலைபேசியுடன் (எண்:1800–425–3300) கூடிய **24 X 7** மணிநேர **நுகர்வோர் சேவை மற்றும் ஆதரவு மையம்** ஒன்று சென்னை நந்தனத்தில் அமைந்துள்ள ஆவின் விற்பனை பிரிவில் **04.09.2003** முதல் இயங்கி வருகிறது. நுகர்வோர், இம்மையத்தை அணுகி தங்களது கருத்துக்களை பதிவு செய்யவும், குறைகளை உடனுக்குடன் தீர்த்துக் கொள்ள இயலும். கடந்த **2017–18**ஆம் ஆண்டில் மொத்தம் **594** புகார்கள் பெறப்பட்டு, உரிய தீர்வு காணப்பட்டுள்ளது.

**2017–18** ஆம் ஆண்டில் பால் நுகர்வோர் நலன் கருதி குடியிருப்போர் நல சங்கங்கள் மற்றும் தொடர்புடைய நலச்சங்க பிரதிநிதிகளுடன் நேரடியாக, பல்வேறு இடங்களில் கலந்துரையாடல் மேற்கொண்டு, தகுந்த ஆலோசனைகள் பெறப்பட்டு, விற்பனை மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப் பட்டன.

## 9. தரக்கட்டுப்பாடு நடவடிக்கைகள்

தரமான பால் கொள்முதல் செய்வதை உறுதிசெய்யும் பொருட்டு மொத்த பால் குளிர்விப்பான்கள், குளிரூட்டும் நிலையங்கள், மாவட்ட ஒன்றிய பால்பண்ணைகள், சென்னை மாநகர பால்பண்ணைகள் ஆகியவற்றில் உள்ள ஆய்வுக் கூடங்களில், வேதியியல் மற்றும் நுண்ணுயிர் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன. பால் பண்ணைகளில் பதப்படுத்துதல் மற்றும் பால் உபபொருட்கள் தயாரித்தல் போன்றவற்றிற்காக பாலை கொள்முதல் செய்வதற்கு முன் தொடக்க பால் கூட்டுறவு சங்க அளவில் தர பரிசோதனை செய்வது அவசியமாகும்.

பால் நுகர்வோர்களுக்கு முதல்தரமான பால் மற்றும் பால் பொருட்களை வழங்கப்படுவது உறுதி செய்யப்பட வேண்டும்.

பயன்பாட்டிற்கு தரமான பால் கொள்முதல் செய்து அதன் மூலம் பால் உற்பத்தியாளர்களுக்கு உரிய பால்பணத்தொகை வழங்கப்படுவது உறுதிசெய்யப்படுகிறது. சங்கங்களிலிருந்து தரமான பால் கொள்முதல் வாடிக்கையாளரின் திருப்திக்கேற்ப பால் மற்றும் பால்

பொருட்களின் நிர்ணயிக்கப்பட்ட அனைத்து தரம் உறுதி செய்யப்படுவதன் மூலம் பால் மற்றும் பால்பொருட்கள் சரியான வகையில் பதப்படுத்தப்படுவதை உறுதி செய்யப்படுகிறது.

பால் உற்பத்தியாளர்கள், சங்க பணியாளர்கள், மாவட்ட ஒன்றியம் மற்றும் இணைய பணியாளர்கள் உள்ளிட்ட அனைத்து நிலையிலும், சங்கம் / மொத்த பால் குளிர்விப்பான் / குளிரூட்டும் நிலையம் / பால்பண்ணை / சமன்படுத்தும் பண்ணை / மாநகர பால்பண்ணைகளில் பால் சேகரிக்கும்போது தரபரிசோதனைகளும் மேற்கொள்வதை உறுதி செய்ய தேவையான அனைத்து பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன.

தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களில் கொள்முதல் செய்யப்படும் பால் முழு தர பரிசோதனை செய்யப்பட்டு, தரத்தின் அடிப்படையில் பால் உற்பத்தியாளர்களுக்கு நிலையான மற்றும் நியாயமான விலை பாலின் கொழுப்புச்சத்து மற்றும் இதரச்சத்தின் அடிப்படையில் கிடைக்க உறுதி செய்யப்படுகிறது.

மாவட்ட ஒன்றியங்கள் மற்றும் பால் பொருட்கள் பண்ணை உள்ளிட்ட அனைத்து இணைய பெருநகர

பண்ணைகளும் பால் மற்றும் பால் உப பொருட்களுக்கான தரம் மற்றும் பாதுகாப்பு உறுதி செய்யும் வகையில் பன்னாட்டு சான்றிதழ் (ISO),உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய சட்டம் (FSSAI), இந்திய தர நிர்ணய நிறுவனம் (BIS) மற்றும் அக்மார்க் (AGMARK,) HACCP ஆகிய தரசான்றுகள் மூலம் நிறுவனத்தின் தரக்கட்டுப்பாடு முறைகள் உறுதி செய்யப் பட்டுள்ளது.

நுகர்வோருக்கு தரமான, சுகாதாரமான பால் மற்றும் பால் பொருட்கள், பாதுகாப்பான முறையில் கொண்டு சேர்ப்பதை உறுதி செய்யும் பொருட்டு இணையம் / மாவட்ட பால்பண்ணைகளின் தரக்கட்டுப்பாடு பிரிவின் மூலம், நவீனமுறையில் தர பரிசோதனை செய்யப்படுகிறது. தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களில் பால் கொள்முதல் செய்யும் ஆரம்ப நிலையிலிருந்து தொடர்ந்து பல்வேறு நிலைகளில் தரம் பரிசோதனை செய்யப்படுகிறது.

## 10. நிதி செயல்பாடு

### 10.1 இணையம் மற்றும் மாவட்ட ஒன்றியங்களில் இலாப நட்ட விபரம்

2011–12 வரை தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வந்த இணையம் மற்றும் 9 மாவட்ட ஒன்றியங்கள் 2012–13 முதல் இலாபம் ஈட்டத் துவங்கியுள்ளன. எனினும் 01.01.2014 முதல் பால்கொள்முதல் விலையில் லிட்டருக்கு ரூ.3/– உயர்வு வழங்கிய நிலையில் பாலின் விற்பனை விலையை உயர்த்தாத காரணத்தாலும் சர்வதேச சந்தையில் கொழுப்பு நீக்கப்பட்ட பால் பவுடரின் விற்பனை விலை, உற்பத்தி விலையை விட சரிந்ததன் காரணமாகவும் 2014–15 மற்றும் 2015–16 ஆம் ஆண்டுகளில் இலாபம் ஈட்ட இயலவில்லை.

அதேபோல் 2011–12ல் நட்டத்தில் இயங்கிவந்த 6 மாவட்ட ஒன்றியங்களான தர்மபுரி, ஈரோடு, காஞ்சிபுரம், தஞ்சாவூர், சிவகங்கை மற்றும் விழுப்புரம் ஒன்றியங்கள் தங்களால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு புனரமைப்பு திட்ட செயல்பாடுகளாலும் மதிப்பு கூட்டப்பட்ட பால் பொருட்கள் மற்றும் பாலின் விற்பனையை மாற்றியமைத்ததாலும் இயக்குதலில் செயல்திறனை திறம்பட கண்காணித்து உற்பத்தி

செலவினத்தை சுருக்கியதாலும் இலாபம் அடையும் நிலைக்கு திரும்பியுள்ளன.

மேலும் **2016–17**ல் நட்டம் அடைந்திருந்த நீலகிரி, திண்டுக்கல் மற்றும் விருதுநகர் ஆகிய **3** ஒன்றியங்கள் இலாபம் அடைவதற்காக மேற்கொள்ளப்பட்ட பால் பொருட்கள் கலவை மற்றும் சந்தை திட்டச் செயல்பாடுகள் போன்ற புனரமைப்பு நடவடிக்கைகளால் **2017–18**ல் இலாபம் அடையும் நிலையை எட்டியுள்ளன.

### அட்டவணை 10

### 2006– 2011 வரையிலான இணையம் மற்றும் மாவட்ட ஒன்றியங்களில் இலாப நட்ட விபரம் (ரூ. கோடியில்)

| வ. எண் | வருடம் | விற்பனை வருவாய் | இலாபம் | நட்டம் | நிகர இலாபம் / நட்டம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2006–07 | 1566.58 | | (–) 55.05 | (–) 55.05 |
| 2 | 2007–08 | 1776.17 | | (–) 27.89 | (–) 27.89 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 | 2008–09 | 2085.08 | 7.80 | | 7.80 |
| 4 | 2009–10 | 2270.75 | | (–) 25.36 | (–) 25.36 |
| 5 | 2010–11 | 2368.67 | | (–) 8.89 | (–) 8.89 |
| கூடுதல் | | 10067.25 | 7.80 | (–)117.19 | (–)109.39 |

**அட்டவணை 11**

**2011– 2018 வரையிலான இணையம் மற்றும் மாவட்ட ஒன்றியங்களில் இலாப நட்ட விபரம் (ரூ. கோடியில்)**

| வ. எண் | வருடம் | விற்பனை வருவாய் | இலாபம் | நட்டம் | நிகர இலாபம் / நட்டம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2011–12 | 2652.00 | | (–) 61.17 | (–) 61.17 |
| 2 | 2012–13 | 3284.00 | 115.37 | | 115.37 |
| 3 | 2013–14 | 3518.00 | 136.18 | | 136.18 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4 | 2014–15 | 3881.00 | | (–) 45.38 | (–) 45.38 |
| 5 | 2015–16 | 5139.00 | | (–) 12.37 | (–) 12.37 |
| 6 | 2016–17 | 5281.00 | 139.34 | | 139.34 |
| 7 | 2017–18 | 5478.00 | 46.52 | | 46.52 |
| | கூடுதல் | 29233.00 | 437.41 | (–) 118.92 | 318.49 |

## 10.2 இணையம் மற்றும் மாவட்ட ஒன்றியங்களின் விற்பனை வருவாய் (இணைப்பு V)

இணையம் மற்றும் மாவட்ட ஒன்றியங்களில் 2011–12 ஆம் ஆண்டில் ரூ.2369 கோடியாக இருந்த விற்பனை வருவாய் 2017–18 ஆம் ஆண்டில் ரூ. 5478 கோடியாக உயர்ந்துள்ளது. அதாவது 131% உயர்வு அடைந்துள்ளது. கடந்த ஆண்டான 2016–17 ஆம் ஆண்டின் ரூ.5281 கோடி விற்பனை வருவாயை ஒப்பிடும் போது 2017–18 ஆம் ஆண்டிற்கான விற்பனை வருவாய் 4% வளர்ச்சி விகிதமாகும்.

விற்பனை வருவாயை மேலும் அதிகப்படுத்துவதற்கு, பால்கொள்முதலில் உயர்வு, புதிய மதிப்பு கூட்டிய பொருட்கள்

தயாரிப்பு செய்தல், பால் மற்றும் பால்பொருட்கள் ஏற்றுமதி செய்தல் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களுக்கு நிலையான சந்தை தேவை இருப்பதன் காரணமாக அடுத்த 5 ஆண்டுகளில் பால் மற்றும் பால் பொருட்கள் வாயிலான விற்பனை வருவாய் விகிதாசாரத்தை தற்போதுள்ள 90:10 என்ற நிலையிலிருந்து 60:40 என்ற அளவிற்கு உயர்த்தி நிலையானதொரு வளர்ச்சியடைய திட்டமிடப்பட்டுள்ளது.

## 11. பணியாளர் நலன்

1. அரசு வெளியீட்டின்படி 4304 ஓய்வு பெற்ற இணையம் மற்றும் 17 மாவட்ட ஒன்றிய பணியாளர்கள் மற்றும் காலம் சென்ற பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை ஓய்வூதிய திட்டம் பின்வருமாறு செயல்படுத்தப் பட்டுள்ளது. 4304 பணியாளர்களுக்கு கருணை ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளது. 888 இறந்து போன பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு குடும்ப ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளது.

2. 01.09.2017 முதல் ஓய்வு பெற்ற மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய பணியாளர்கள் மற்றும் இணைய பணியாளர்களுக்கு நாளொன்றுக்கு 500 மிலி பால் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.

3. அரசின் புதிய காப்பீடு திட்டம், 4485 இணைய மற்றும் மாவட்ட ஒன்றிய பணியாளர்களுக்கு 01.01.2017 முதல் 4 ஆண்டுகளுக்கு விரிவாக்கம் செய்யப்பட்டு ரூ.1.06 கோடி ஆண்டு காப்பீடு சந்தாவாக காப்பீடு நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

4. 2017–18 ஆம் ஆண்டில் பால்வளத் துறையில் 14 பணியாளர்களுக்கும், மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களில் 179 பணியாளர்களுக்கும், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையத்தில் 157 பணியாளர்களுக்கும் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. (பொது மேலாளர் 5, துணை பொது மேலாளர் 18, உதவி பொது மேலாளர் 15, மேலாளர் 16, துணை மேலாளர் 2, செயலர், இளநிலை நிர்வாகிகள் மற்றும் தொழிற்நுட்ப பணியாளர்கள் 101)

5. இதே போன்று, நேரடி நியமன அடிப்படையில் பால்வளத்துறையில் **21** புதிய நியமனங்கள், மற்றும் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களில் **66** புதிய நியமனங்கள் வழங்கப் பட்டுள்ளன.

6. பொங்கல் பண்டிகையின் போது இணையம், ஒன்றியம் மற்றும் தொடக்க பால் கூட்டுறவு சங்கப் பணியாளர்களுக்கு உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

7. தீபாவளி பண்டிகையின் போது இணையம், ஒன்றியம் மற்றும் தொடக்க பால் கூட்டுறவு சங்கப் பணியாளர்களுக்கு போனஸ் மற்றும் கருணைத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

8. சங்கப்பணியார்களுக்கு சீருடை துறை மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

9. பொங்கல் மற்றும் தீபாவளி பண்டிகை காலங்களில் இணையம், ஒன்றியம் மற்றும் தொடக்க பால் கூட்டுறவு சங்கப் பணியாளர்களுக்கு அன்பளிப்பாக பால் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

10. தொடக்க பால் கூட்டுறவு சங்க பணியாளர்கள், மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய பணியாளர்கள் மற்றும் இணைய பணியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் 2017–18 ஆம் ஆண்டில் சீருடை கொள்முதல் மற்றும் தையற்கூலி செலவினத்திற்கு கூடுதலாக ரூ. 500/– அனுமதிக்கப்பட்டுள்ளது.

11. மாதவரம் பால்பண்ணையில் உள்ள குடியிருப்புகள் ரூ.4.12 கோடியில் புதுப்பிக்கப்பட்டு வருகின்றன.

## 12. பால் கூட்டுறவு தணிக்கைத் துறை

பால் கூட்டுறவுச் சங்கங்களின் சட்டப்பூர்வ தணிக்கைப் பணியினை மட்டும் மேற்கொள்ள ஏதுவாக, பால் கூட்டுறவுகளின் தணிக்கைத்துறை 1987 ஆம் ஆண்டு தனித் துறையாக உருவாக்கப்பட்டது. தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம், மாவட்ட அளவிலான 17 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள், தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றின் செயல்பாடுகள், நிதிநிலையை ஒழுங்குபடுத்துதல்,

பொறுப்புடைமை மற்றும் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்தவும் இத்துறை செயல்படுகிறது.

## 12.1 பணிநிலைத்திறன்

இத்துறைக்கு அனுமதிக்கப்பட்ட **333** பணியிடங்களில், அயல்பணியில் இதர துறைகளிலிருந்து பெறப்பட்ட **297** பணியாளர்களைக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

**அட்டவணை 12**

**அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்ட பதவிகள் மற்றும் பணிநிலைத்திறன்**

| பணியிடத்தின்பெயர் | எண்ணிக்கை |
|---|---|
| இயக்குநர் | 1 |
| இணை இயக்குநர் | 1 |
| துணை இயக்குநர் (கணக்கு) | 1 |
| மண்டல துணை இயக்குநர் | 5 |
| உதவி இயக்குநர் | 59 |
| முதுநிலை கூட்டுறவுத் தணிக்கையாளர் | 224 |
| இளநிலை கூட்டுறவுத் தணிக்கையாளர் | 7 |
| அமைச்சுப்பணி | 10 |

| | |
|---|---|
| பொது சார்நிலைப்பணி | 8 |
| அடிப்படை பணி | 17 |
| **மொத்தம்** | **333** |

## 12.2 இணையத்திற்தணிக்கை

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் **2016–17** ஆம் ஆண்டுக்கான சட்டபூர்வ தணிக்கை மேற்கொள்ளப்பட்டு தணிக்கைச் சான்று உரிய சட்டப்பூர்வ காலக்கெடுவிற்குள் வழங்கப்பட்டுள்ளது. மேலும், இணையத்தின் **2017–18**ஆம் ஆண்டுக்கான இறுதித் தணிக்கைப் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

## 12.3 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் தணிக்கை

**17** மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் **2016–17**ம் ஆண்டிற்கான சட்டபூர்வ தணிக்கை நிறைவு செய்யப்பட்டு தணிக்கைச் சான்றுகள் அனைத்தும் உரிய சட்டபூர்வ காலக்கெடுவிற்குள் வழங்கப்பட்டு விட்டன. மேலும், **2017–18**ஆம் ஆண்டின் முதல் அரையாண்டு தணிக்கை, கோவை, திண்டுக்கல், ஈரோடு,

கன்னியாகுமரி, மதுரை, நீலகிரி, புதுக்கோட்டை, சேலம், சிவகங்கை, திருநெல்வேலி, தஞ்சாவூர், திருச்சி, விழுப்புரம் மற்றும் விருதுநகர் ஆகிய 14 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டு விட்டன. எஞ்சிய 3 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் தணிக்கை நடவடிக்கையில் உள்ளன. முடிக்கப்பட்ட 14 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களுக்கு தணிக்கைச் சான்றுகள் வழங்கும் பணி நடவடிக்கையில் உள்ளது. **2017–18** ஆம் ஆண்டுக்கான இறுதித் தணிக்கைப் பணிகள், அனைத்து மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களிலும் முன்னேற்றத்தில் உள்ளன.

**12.4. தொடக்க சங்கங்கங்களின்தணிக்கை**

**2017–18**ஆம் ஆண்டில், தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் நுகர்வோர் பால் கூட்டுறவுச் சங்கங்களின் **2016–17**ம் ஆண்டிற்கான சட்டப்பூர்வ தணிக்கை **10702** சங்கங்களில் நிறைவு செய்யப்பட்டுள்ளது. **2017–18**ம் ஆண்டுக்கான இறுதிதணிக்கைப் பணிகள் தணிக்கைத் திட்டத்தின்படி

தற்பொழுது தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் நுகர்வோர் பால் கூட்டுறவுச் சங்கங்களில் தொடங்கப்பட்டுள்ளது.

### 12.5. தணிக்கைக் கட்டணம் மற்றும் அடிப்படைவிதிக் கட்டணம்

**2017–18**ஆம் ஆண்டில், பால் கூட்டுறவுச் சங்கங்களில் சட்டபூர்வ தணிக்கை மேற் கொண்டதற்காக தணிக்கை கட்டணமாக ரூ. **58.07** இலட்சம் மற்றும் அடிப்படை விதி **127**ன் கீழ் பால் கூட்டுறவு இணையம், மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் மற்றும் தொடக்கச் சங்கங்களில் தணிக்கை மேற்கொள்ளப்பட்டதற்காக, ரூ. **65.73** இலட்சம் கட்டணமாக வசூலிக்கப்பட்டு அரசு கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

### 12.6 தணிக்கை மறு ஆய்வு (கணக்கு) குழுக் கூட்டங்கள்

பால் கூட்டுறவு நிறுவனங்களில் உள்ள தணிக்கை மறுப்பினங்களை தீர்வு செய்வதற்காக, தணிக்கை மறு ஆய்வுக் (கணக்கு) குழுக் கூட்டங்கள் முறையாக நடத்தப்பட்டு வருகின்றன. **2017–18**ம் ஆண்டில், மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் **134** தணிக்கை மறுப்பினங்களின் மீதான நிவர்த்தி அறிக்கைகளும், தொடக்க

பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களில் **438** தணிக்கை மறுப்பினங்களின் மீதான நிவர்த்தி அறிக்கைகளும், தணிக்கை மறு ஆய்வுக்(கணக்கு) குழுக் கூட்டத்தில் ஆய்வு செய்யப்பட்டு, முடிவு காணப்பட்டுள்ளன.

### 12.7 பயிற்சி மற்றும் மேம்பாடு

பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறையின் தணிக்கையாளர்களுக்கு, துறை சார்ந்த அறிவை மேம்படுத்து வதற்காக பல்வேறு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அரசின் நிதியுதவியுடன் துறையில் உள்ள தணிக்கையாளர் களுக்கு புத்தாக்கப்பயிற்சி வழங்கப்பட்டது.

## 13. 2018–19 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு கணக்கு

பால்வளத் துறைக்கான **2018–19** ஆம் ஆண்டிற்கான வரவு செலவு கணக்கில் ரூ.**118.02** கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் ரூ. **53.02** கோடி, உத்தேசிக்கப்பட்ட வருவாய் செலவினமாகும். ரூ. **65.00** கோடி மூலதன செலவினமாகும்.

## அட்டவணை 13

## நிதி ஒதுக்கீடு 2011–12 ஆண்டு முதல் 2018–19 வரை

## (இணைப்பு–VI)

| ஆண்டு | ஒதுக்கீடு (ரூபாய் கோடியில்) |
|---|---|
| 2011–2012 | 65.72 |
| 2012–2013 | 51.25 |
| 2013–2014 | 35.97 |
| 2014–2015 | 81.91 |
| 2015–2016 | 98.18 |
| 2016–2017 | 101.21 |
| 2017–2018 | 118.63 |
| 2018–2019 | 118.02 |

## 14 . முன்னேற்ற பாதை

விவசாயிகளின் நலனுக்காகவும், பால் தொழில் வளர்ச்சிக்காகவும், வரும் ஆண்டுகளில் பின்வரும் முனைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது

1. செயலற்ற சங்கங்களை மறுமலர்ச்சி செய்யவும், கூட்டுறவு அமைப்பின் விவகார எல்லையில் வராத பகுதிகளிலிருந்து பால் கொள்முதல் செய்யவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2. மானியத் தொகையை அதிகரித்து கால்நடைத் தீவன விற்பனையை உயர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

3. தீவன பற்றாக்குறையை சமாளிப்பதற்கு ஒன்றியங்களில் உள்ள நிலப்பரப்புகளில் தீவனசாகுபடி செய்யவும், தீவனத்தை சகாய விலையில் பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

4. பால்பண்ணைகள், குளிரூட்டும் நிலையங்கள், மொத்த பால் குளிர்விப்பான் மையங்களில் உள்ள தரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்களை வலுப்படுத்துவதன் மூலமும், முறையான தர கண்காணிப்பு மேற்கொள்வதாலும் தரக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்படும்

5. சென்னை, வேலூர், சேலம், தஞ்சாவூர், திருச்சி மற்றும் விருதுநகர் போன்ற பெரிய பால் பண்ணைகளில் உட்கட்டமைப்புகள் சுமார் ரூபாய் 400 கோடி முதலீட்டில் மேம்படுத்தப்படும்.

6. விற்பனை நிலையங்களின் எண்ணிக்கையை உயர்த்துவது, நாடு முழுவதும் சந்தை விரிவாக்கம் மேற்கொள்வது, பல்வேறு நாடுகளுக்கு ஆவின் பால் பொருட்களை ஏற்றுமதி செய்வது மற்றும் தேவையான விளம்பரம் செய்வது போன்ற தீவிர சந்தை நடவடிக்கைகளை மேற்கொண்டு பால் மற்றும் பால் பொருட்கள் விற்பனை அதிகரிக்கப்படும்

7. விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்க தேவையான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

## 15. முடிவுரை

கடந்த ஆண்டுகளில் நுகர்வோர் தேவையை பூர்த்தி செய்யும் நிலையில் கிராம பொருளாதாரத்தை உயர்த்திடும் பணியில் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் பங்கு அனைவரது பாராட்டுகளையும் பெற்றுள்ளது.

அரசு மேற்கொண்ட பயனுள்ள தெளிவான வழிகாட்டுதல்கள் மற்றும் ஆதரவால் போட்டிகளை எதிர்கொள்ளவும், உயர்நிலைக்கு எழுவதற்கும், தரமான பால்

உற்பத்தியில் தளராத முயற்சிகள், குறைந்த செலவிலான ஆற்றல் நிறைந்த தொழில்நுட்பத்தை பயன்படுத்துவது, பல்வேறு வகையான உபபொருட்கள் தயாரித்தல், பெருவழி பாலகம் மற்றும் விற்பனை நிலையங்கள் நிறுவுதல் ஆகிய நடவடிக்கைகளின் காரணமாக, **2010–11**ல் நாளொன்றுக்கு **20.67** இலட்சம் லிட்டர் ஆக இருந்த சராசரி பால் கொள்முதல், **2017–18**ல் நாளொன்றுக்கு **29.62** இலட்சம் லிட்டர் ஆக உயர்ந்துள்ளதன் மூலம் அறியப்படுகிறது.

பால் உற்பத்தியாளர்கள் நலன் மற்றும் நுகர்வோர் திருப்தி ஆகியவற்றில் திட்டமிட்ட செயல்பாடுகள் வாயிலாக சிங்கப்பூரில் அண்மையில் UHT பால் விற்பனை துவக்கப்பட்டதன் மூலம் ஆவின் பெயர் சர்வதேச நிலையை அடையும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. மேலும் அனைத்து செயல்பாடுகளிலும் ஆவின் புதிய உச்சத்தை அடைவது வெகு தொலைவில் இல்லை.

தற்போது சந்தையில் காணப்படும் பல்வேறு தனியார் போட்டிகளுக்கிடையே **2022** ஆம் ஆண்டில் விவசாயிகளின் வருமானம் இரட்டிப்பாக உயர்த்தும் நோக்கத்தை அடைய தளராது பாடுபட்டு வருகையில், வாடிக்கையாளரது தேவையை

ஆவின் தொடர்ந்து வெற்றிகரமாக பூர்த்தி செய்யும் என்று கூறுவதில் மிகையாகாது.

**கே.டி.ராஜேந்திரபாலாஜி**
**பால் மற்றும் பால்பண்ணை**
**மேம்பாட்டுத்துறை அமைச்சர்**


## பால் கூட்டுறவுகள் குறித்த மேலோட்ட பார்வை

| வ. எண் | பொருள் | |
|---|---|---|
| 1 | தொடக்க பால் கூட்டுறவுச் சங்கங்களின் மொத்த எண்ணிக்கை | 12,585 |
| 2 | 2017–18ல் துவங்கப்பட்ட பால் கூட்டுறவு சங்கங்கள் (எண்ணில்) | 446 |
| 3 | தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் மொத்த உறுப்பினர்கள் (இலட்சத்தில்) | 20.26 |
| 4 | பால் வழங்கும் உறுப்பினர்கள் (இலட்சத்தில்) | 4.60 |
| 5 | சங்கங்களில் பால் கொள்முதல் (நாளொன்றுக்கு) (இலட்சம் லிட்டரில்) | 31 முதல் 36 |
| 6 | மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் எண்ணிக்கை | 17 |
| 7 | மாநில அளவிலான இணையம் | 1 |
| 8 | ஒன்றியங்களில் பால் கொள்முதல் ( நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில்) | 26 முதல் 31 |
| 9 | சென்னை மாநகரில் பால் விற்பனை ( நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில்) | 11.91 |
| 10 | மாவட்ட ஒன்றியங்களில் பால் விற்பனை (நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில்) | 10.00 |
| 11 | ஒன்றிய பால்பண்ணைகளின் எண்ணிக்கை | 18 |

| | | |
|---|---|---|
| 12 | இணையத்தின் பால்பண்ணைகள் எண்ணிக்கை | 5 |
| 13 | ஒன்றியங்களின் பால்பண்ணைகள் கையாளும் திறன் (நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில்) | 29.57 |
| 14 | இணையத்தின் பால்பண்ணைகள் கையாளும் திறன் (நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில்) | 14.15 |
| 15 | பால் குளிரூட்டும் நிலையங்களின் எண்ணிக்கை | 34 |
| 16 | குளிரூட்டும் நிலையங்களின் கையாளும் திறன் (நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில் ) | 14.25 |
| 17 | மொத்த பால் குளிர்விப்பான்கள் எண்ணிக்கை | 341 |
| 18 | மொத்த பால் குளிர்விப்பான்கள் குளிர்விக்கும் திறன் ( நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில் ) | 15.19 |
| 19 | கிராம பால் கொள்முதல் வழித்தடங்கள் எண்ணிக்கை | 798 |
| 20 | மாவட்ட ஒன்றிய அளவிலான பால் விநியோக வழித்தடங்கள் எண்ணிக்கை | 304 |
| 21 | சென்னை மாநகர பால் வினியோக வழித்தடங்கள் எண்ணிக்கை | 149 |
| 22 | பால் பவுடர் பண்ணைகளின் எண்ணிக்கை ( ஈரோடு, சேலம், மதுரை தருமபுரி மாவட்ட ஒன்றியங்கள் மற்றும் இணையம்) | 5 |
| 23 | பால்பவுடர் உற்பத்தித்திறன் (மெ.டன்/ நாள்) | 90 |
| 24 | வெண்ணெய் சேமிக்கும் திறன்( மெ.டன்) | 4,304 |
| 25 | பால்பவுடர் சேமிக்கும் திறன்( மெ.டன்) | 6,950 |

## இணைப்பு – I


## மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்களின் பால் கொள்முதல்



## இணைப்பு – II


## கால்நடை தீவனம் வழங்கியது

## (மெட்ரிக் டன்னில்)



## இணைப்பு – III

**தாது உப்பு கலவை வழங்கியது**




## இணைப்பு – IV

## தேசீய வேளாண்மை அபிவிருத்தித் திட்டம்

## இணைப்பு – V


**இணையம் மற்றும் மாவட்ட ஒன்றியங்களின் விற்பனை வருவாய் (இணைப்பு IV)**

**(ரூபாய் கோடியில்)**




**இணைப்பு – VI**

**நிதி ஒதுக்கீடு 2011–12 ஆண்டு முதல் 2018–19 வரை**




ஒன்றியம் வாரியாக பால் கையாளும் திறன்

(நாளொன்றுக்கு லிட்டரில்)

| வ. எண் | ஒன்றியத்தின் பெயர் | பால் பண்ணை யின் பதனிடும் திறன் | | குளிரூட்டும் திறன் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | குளிரூட்டும் நிலையம் | | மொத்த பால் குளிர்விப்பான் | | மொத்தம் |
| | | எண்ணிக்கை | திறன் | எண்ணிக்கை | திறன் | எண்ணிக் கை | திறன் | |
| 1 | சேலம் | 1 | 5,00,000 | 3 | 2,10,000 | 50 | 1,99,000 | 4,09,000 |
| 2 | கோயம்புத்தூர் | 1 | 5,00,000 | 4 | 1,30,000 | 24 | 1,14,000 | 2,44,000 |
| 3 | ஈரோடு | 1 | 5,00,000 | 1 | 1,00,000 | 14 | 58,000 | 1,58,000 |
| 4 | மதுரை | 1 | 3,00,000 | 3 | 1,35,000 | 66 | 3,24,000 | 4,59,000 |
| 5 | திருச்சி | | | | | | | |
| | அ) திருச்சிராப்பள்ளி | 1 | 1,50,000 | 3 | 2,30,000 | 42 | 2,00,000 | 4,30,000 |
| | ஆ) பாடாலூர் | 1 | 1,00,000 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 6 | தருமபுரி | 1 | 2,00,000 | 2 | 60,000 | 21 | 93,000 | 1,53,000 |
| 7 | வேலூர் | 1 | 1,50,000 | 4 | 2,30,000 | 38 | 1,76,000 | 4,06,000 |
| 8 | விழுப்புரம் | 1 | 1,00,000 | 2 | 1,40,000 | 19 | 78,000 | 2,18,000 |
| 9 | திருநெல்வேலி | 1 | 1,00,000 | 4 | 90,000 | 12 | 58,000 | 1,48,000 |
| 10 | காஞ்சிபுரம்–திருவள்ளூர் | 1 | 50,000 | 2 | 60,000 | 11 | 45,000 | 1,05,000 |
| 11 | நீலகிரி | 1 | 50,000 | 1 | 10,000 | 6 | 11,000 | 21,000 |
| 12 | சிவகங்களை | 1 | 50,000 | 2 | 20,000 | 12 | 52,000 | 72,000 |
| 13 | விருதுநகர் | 1 | 50,000 | 1 | 10,000 | 1 | 5000 | 15,000 |
| 14 | புதுக்கோட்டை | 1 | 35,000 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 15 | திண்டுக்கல் | 1 | 30,000 | 2 | 40,000 | 12 | 50,000 | 90,000 |
| 16 | தஞ்சாவூர் | 1 | 26,000 | 1 | 10,000 | 13 | 51,000 | 61,000 |
| 17 | கன்னியாகுமரி | 1 | 16,000 | 0 | 0 | 0 | 0 | 0 |
| | **மொத்தம்** | **18** | **29,07,000** | **24** | **400,005** | **187** | **15,14,000** | **29,89,000** |
| | **பெருநகர பால் பண்ணைகள்** | | | | | | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| ய | மத்திய பால்பண்ணை | 1 | 3,50,000 | | | | | |
| ெ | அம்பத்தூர் | 1 | 4,00,000 | | | | | |
| உ | சோழிங்க நல்லூர் | 1 | 4,00,000 | | | | | |
| ன | பால் பொருட்கள் பண்ணை | 1 | 65,000 | | | | | |
| ந | திருவண்ணாமலை (த.நா.கூ.பா.உ.இ) | 1 | 2,00,000 | | | | | |
| | **மொத்தம்** | **5** | **14,15,000** | | | | | |
| | **கூடுதல் மொத்தம்** | **23** | **43,22,000** | | | | | |



சங்கங்களில் பால் கொள்முதல்



தீவனப்புல் பண்ணை புதுக்குடி



பால் கொள்முதல் – தொகுப்பு பால் குளிர்விப்பான்



பால் கொள்முதல் – பால் குளிரூட்டும் நிலையம்



வெண்ணெய் தயாரிக்கும் இயந்திரம்



வெண்ணெயை பாக்கெட்டில் அடைக்கும் இயந்திரம்





மாண்புமிகு. தமிழக முதல்வர் அவர்களால்
மதுரையில் திறந்து வைக்கப்பட்ட பயிற்சி நிலையம்





மாண்புமிகு. தமிழக முதல்வர் அவர்களால்
மதுரையில் திறந்து வைக்கப்பட்ட
தானியங்கி பால் பவுடர் கிட்டங்கி







சிங்கப்பூரில் ஆவினின் UHT டெட்ரா பேக்
பால் விற்பனை துவக்கம்






மாண்புமிகு. தமிழக முதல்வர் அவர்களால் மதுரையில் திறந்து வைக்கப்பட்ட துணைப்பதிவாளர் (பால்வளம்) அலுவலகக் கட்டிடம் – **13.03.2018**







மாண்புமிகு. தமிழக முதல்வர் அவர்களால்
திறந்து வைக்கப்பட்ட ஆவின் உயர்தர பாலகங்கள்
13.03.2018




மாண்புமிகு. பால்வளத்துறை அமைச்சர் அவர்களால்
விருதுநகரில் திறந்து வைக்கப்பட்ட
ஆவின் உயர்தர பாலகம் –23.07.2017



நவீன பால்பண்ணை–சோழிங்கநல்லூர்




தானியங்கி பால்பண்ணை – கோயமுத்தூர்